பக்கங்கள்:-28

காலை முரசு

## தம்மிக்கவுக்குப் பிணை அர்ஜுன கைதாகும் நிலை



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் தம்மிக்க 06

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | மார்கழி 01 | செவ்வாய்க்கிழமை | 16.12.2025 | அதிர்வு 138



### தமிழ் மக்களுக்குக் கொலை மிரட்டல் விடுத்த

# மட்டு.அம்பிட்டிய தேரரை கைது செய்யப் பிடிவிறாந்து

### வெளிநாட்டுப் பயணத் தடையும் விதித்தது நீதிமன்றம்

*(கனகராசா சரவணன்)*

**தமிழ் மக்களை வெட்டிக் கொல்ல வேண்டும் எனக் கூறிய அம்பிட்டிய சுமண ரத்ன தேரருக்கு மட்டக்களப்பு நீதிவான் நேற்று திங்கட்கிழமை நீதிமன்றப் பிடிவிறாந்து பிறப்பித்து, அவர் வெளிநாட்டுக்குச் செல்வதற்குப் பயணத் தடையையும் விதித்து எதிர்வரும் ஜனவரி 26 திகதிக்கு வழக்கை ஒத்திவைத்துக் கட்டளையிட்டு உத்தரவிட்டார்.**

**கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி ஊடகங்களுக்கு அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் வழங்கிய செவியின் போது, "வடக்கில் உள்ள தமிழ் மக்களையும் தெற்கில் உள்ள தமிழ் மக்களையும் வெட்டிக் கொல்ல வேண்டும்" என்று தெரிவித்திருந்தார்.** 06

# கோர விபத்தில் சிறுமி மரணம்!



**(க.மகாதேவன்)**

கோர விபத்தில் சிறுமி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தத் துயரச் சம்பவம் நேற்று ஹொரண, திக்ஹேன்புர பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இரு பிள்ளைகளுடன் பயணம் செய்த தாய் ஒருவர் செலுத்திய மோட்டார் சைக்கிள், முன்னால் 05




அரச சொத்தை அல்லது நிதியை மோசடி செய்தவர் அது தொடர்பான வழக்குகளில் சிக்கினாலும், அந்தப் பணத்தை அல்லது அரசுக்கு ஏற்பட்ட இழப்பைத் தான் மீளச் செலுத்தி விட்டால் அவரை நிரபராதி என்று விடுவித்து விடலாமா? அத்தகைய சட்ட வசதி அல்லது வாய்ப்பு இலங்கையில் இருக்கின்றதா? – என்று கேட்டால் எல்லோரும் இல்லை என்றுதான் சொல்லுவார்கள்.

ஆனால் அது தவறு. சில ஆயிரங்கள், சில லட்சங்கள் அல்ல, பல்லாயிரம் கோடிகளை அரசிடமிருந்து சூறையாடியவர்கள் அல்லது அரசுக்கு அத்தகைய இழப்பை ஏற்படுத்தியவர்கள் அந்த நஷ்டத்தை அரசுக்கு மீளச் செலுத்துவார்களாயின் அவர்களுக்கு எதிராக வழக்கு போடாமல் அவர்களை விடுவித்து விடலாம்.

இத்தகைய சட்ட ஏற்பாடு இலங்கையில்தான் இருக்கின்றது.

அதுவும் அப்படி அவரை விடுவிக்கும் முடிவை எடுக்கும் அதிகாரம் இலங்கைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்திற்கு வழங்கப்படாமல் லஞ்சம் 06







# ஜனாதிபதி அநுர தலைமையில் கூடிய தேசிய அனர்த்த முகாமைத்துவ சபை!

## கூட்டுப் பொறிமுறையை உருவாக்குவது குறித்து ஆராய்வு

தேசிய அனர்த்த முகாமைத்துவ சபையின் 16 ஆவது அமர்வு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

தேசிய அனர்த்த முகாமைத்துவக் கூட்டுப் பொறிமுறையை உருவாக்குதல் மற்றும் 2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்தை திருத்துவது தொடர்பான பத்திரம் இதன்போது சமர்ப்பிக்கப்பட்டது.

பல்தரப்பு அணுகுமுறை மூலம் தோட்டப் பகுதிகளில் மண்சரிவு அபாயத்தைக் குறைப்பதற்காக, என்.பி.ஆர்.ஓ. உட்பட தொடர்புடைய தரப்பினர்கள், தோட்ட உரிமையாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, வடிகாலமைப்புப் பொறிமுறையை நிறுவுதல் மற்றும் மறுசீரமைப்பு செய்வதற்கான பொறிமுறையொன்றை நிறுவுதல் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

அத்தோடு, தாக்கம் ஏற்படக் கூடிய மத்திய பிரதேசத்தை முகாமைத்துவம் செய்வதற்கான திட்டத்தைத் தயாரிப்பதற்காக தொழில்நுட்பக் குழுவொன்றை நியமித்தல் மற்றும் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களிலிருந்தும் தகவல்களை ஒருங்கிணைக்கும் ஒரு திட்டத்தைத் தயாரித்தல், அனைத்து நிறுவனங்களும் அந்தத் தரவை அணுக அனுமதிக்கும் ஒரு ஒருங்கிணைந்த டிஜிட்டல் தளத்தைத் தயாரித்தல் என்பன குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

வெளிப்படைத்தன்மையை உறுதி செய்து, கிடைத்துள்ள அனைத்து வெளிநாட்டு நிவாரண உதவிகளையும் (விநியோகங்களை) ஒருங்கிணைப்பதற்காக வெளிநாட்டு நிவாரண ஒருங்கிணைப்புக்கென குழுவொன்ற நிறுவுவது குறித்தும் அதற்கு அதிகாரம் வழங்குவது குறித்தும் இங்கு ஆராயப்பட்டது.

ஜனாதிபதியின் தலைமையில் தேசிய அனர்த்த முகாமைத்துவ சபை 7 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த ஆகஸ்ட் 7ஆம் திகதி கூடியது. திடீர் அனர்த்த நிலைமையுடன் கடந்த நவம்பர் 27 ஆம் திகதி இரவு மீண்டும் சபை கூடியது. டித்வா சூறாவளிக்குப் பிறகு இயல்பு நிலைமையை மீள ஏற்படுத்தத் தேவையான கொள்கை முடிவுகளை எடுப்பதற்கும் நிறுவன வழிகாட்டுதலை வழங்குவதற்கும் ஜனாதிபதியின் தலைமையில் இந்தச் சபை நேற்று கூடியது.

டித்வா சூறாவளியால் நாடு முழுவதும் 2.2 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 6,164 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளன. ஒரு இலட்சத்து 12 ஆயிரத்து 110 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன. அதன்படி, 796 பராமரிப்பு நிலையங்களில் 72 ஆயிரத்து 911 பேர் தங்கியுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையப் பணிப்பாளர் நாயகம் இங்கு தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரணம், மீள்குடியேற்றம் மற்றும் வாழ்வாதாரங்களை மீண்டும் கட்டியெழுப்புதல், இயல்பு வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டம் என்பன குறித்தும் இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

மத்திய மலைநாட்டைப் பாதுகாப்பதற்கான நிரந்தரத் தீர்வைக் காணும் அரசின் திட்டத்தின் கீழ், தாக்கம் ஏற்படக் கூடிய வலயங்களில் உள்ள 15 ஆயிரம் வீடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன எனவும், 2026 ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்த மக்களுக்காக 8 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்க எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளைச் சுத்தம் செய்வதற்காக அரசு வழங்கும் 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு தொடர்பில் எழுந்துள்ள சிக்கல்கள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இந்த வாரத்துக்குள் அதற்கான நிதியைப் பூரணமாகச் செலுத்தி முடிக்குமாறும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

தரவுகளைச் சேகரித்தல் மற்றும் புதுப்பித்தல் ஆகியவற்றில் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்தும் அதற்கான சட்ட கட்டமைப்பின் அவசியம் குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது. இந்த நடவடிக்கைகளுக்கு முறையான செயல்முறையின் அவசியம் குறித்து ஜனாதிபதி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் கவனம் செலுத்தினர்.

நடைமுறைச் சாத்தியமான வேலைத் திட்டத்தின் மூலம் அடுத்த 3 ஆண்டுகளுக்குள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி இங்கு வலியுறுத்தினார்.

2016 ஆம் ஆண்டு வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்களுக்கு இழப்பீடாக மக்களுக்கு 7.51 பில்லியன் ரூபா வழங்கப்பட்ட போதிலும், 1.42 பில்லியன் ரூபாவுக்கான மீளமைப்பு செயற்பாடுகளே இடம்பெற்றுள்ளன. இதனால் அரசுக்கு 5.79 பில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என்று நிதி அமைச்சு அடையாளம் கண்டுள்ளது எனவும் நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும தெரிவித்தார்.

இந்தக் காப்புறுதி முறைமையைத் தொடர்ந்து முன்னெடுப்பதாக இருந்தால், அது அரசுக்கு நன்மை பயப்பதோடு, பயனாளிகளுக்கு அதிகபட்ச பாதுகாப்பை வழங்கும் காப்புறுதி முறைமையாக இருக்க வேண்டும் என்றும், அதனை மீண்டும் ஆரம்பிப்பதென்றால், நிபுணர்களின் ஆலோசனையைப் பெற்று அதில் தேவையான திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ,

தொடர்ச்சி▼







# ஜனாதிபதி அநுர தலைமையில் கூடிய தேசிய அனர்த்த முகாமைத்துவ சபை!

## கூட்டுப் பொறிமுறையை உருவாக்குவது குறித்து ஆராய்வு

தொடர்ச்சி▲

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டீ. லால்காந்த, சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால, பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஏ.எச்.எம்.எச். அபயரத்ன, வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் சுசில் ரணசிங்க, வலுசக்தி அமைச்சர் பொறியியலாளர் குமார ஜயக்கொடி, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர் உபாலி பன்னிலகே, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணாயக்கார, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி, பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) அருண ஜயசேகர, மேல் மாகாண ஆளுநர் ஹனிஃப் யூசுப், வடமேல் மாகாண ஆளுநர் திஸ்ஸ வர்ணசூரிய, மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் எஸ்.பி.எஸ். அபேகோன், சபரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன, கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் சந்திரசேகர, வட மத்திய மாகாண ஆளுநர் வசந்த குமார விமலசிறி, வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம், ஊவா மாகாண ஆளுநர் கபில ஜயசேகர ஆகியோருடன் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.எம். மரிக்கார், பி. ஆரியவன்ச, பத்மநாதன் சத்தியலிங்கம், அனுராத ஜயரத்ன, உதுமாலெப்பை மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வு) சம்பத் துய்யகொந்தா, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம், பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி, பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ். ஆலோக பண்டார, வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஏ.கே. கருணாநாயக்க, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சம்பத் கொட்டுவேகொட மற்றும் முப்படைத் தளபதிகள் உட்பட பாதுகாப்புப் படைப் பிரதானிகள் மற்றும் அரச அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.







# யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் பயணிகள் முனையக் கட்டடத்துக்கு அடிக்கல்!

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்கான புதிய பயணிகள் முனையக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் தலைவர் சமன் அமரசிங்க, விமான நிலையத்தின் இணை முகாமைத்துவத் தலைவர் சஞ்சீவ அமரபதி, இலங்கை விமான நிலையத்தின் ஆணைக்குழுவின் பிரதித் தலைவர், பொறியியலாளர் ஆகியோரால் சர்வமத வழிபாடுகளோடு அடிக்கல் நாட்டப்பட்டது.

புதிய பயணிகள் முனையக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இரண்டாம் கட்டத்துக்கான வேலைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இரண்டு கட்டங்களுக்கும் எதிர்பார்க்கப்படும் மொத்த முதலீடு 700 மில்லியன் ரூபா எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

முன்னர் பலாலி விமான நிலையம் என்று அழைக்கப்பட்ட யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம், பிரிட்டிஷ் ஆயுதப் படைகளால் பலாலியில் 359 ஏக்கர் நிலத்தில் நிறுவப்பட்டிருந்தது.











# ஐக்கிய கிராமிய உத்தியோகத்தர் சங்கப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபருடன் நேற்று சந்திப்பு

## தாம் எதிர்நோக்கும் நடைமுறைப் பிரச்சினைகளை எடுத்துரைத்தனர்



ஐக்கிய கிராமிய உத்தியோகத்தர் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக, யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபருக்கும் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலர் உணவு நிவாரணம் மற்றும் 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு தொடர்பாகவும், கிராம அலுவலர்கள் எதிர்நோக்குகின்ற நடைமுறைப் பிரச்சினைகள் தொடர்பாகவும் கிராம அலுவலர்களால் விரிவாக அரசாங்க அதிபருக்குத் தெரிவிக்கப்பட்டது.

இதில் கலந்துகொண்ட கிராம அலுவலர்கள் தமது பிரதேச செயலக ரீதியாக எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகள், தீர்வுகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பாக அரசாங்க அதிபரிடம் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

மேலும், 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு தொடர்பாக ஊடகங்களில் வெளியிடப்படும்செய்திகள்தொடர்பானதங்களுடைய அதிருப்தி நிலைமையையும் அவர்கள் தெரியப்படுத்தினர்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கருத்துத் தெரிவிக்கையில், யாழ்ப்பாண மாவட்டம் யுத்தம் மற்றும் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட ஒரு மாவட்டம் எனவும், இவ்வாறான பல சந்தர்ப்பங்களிலும் கிராம அலுவலர்கள் அர்ப்பணிப்புடன் கடமையாற்றி வருகின்றனர் எனவும் கூறினர்.

மேலும், யாழ்ப்பாணம் மக்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இடப்பெயர்வு வேளையிலும், சுனாமி, கொரோனா இடர் நிலைமை மற்றும் எரிபொருள் பற்றாக்குறை, தற்போதைய வெள்ள அனர்த்தம் ஆகிய நிலைமைகளின் போதும் பிரதேச செயலாளர், கிராம சேவையாளர்கள் மற்றும் கிராம மட்ட உத்தியோகத்தர்கள் அனைவரும் மக்களுடன் இணைந்து மக்களுக்காகப் பணியாற்றியவர்கள் எனவும், இந்த அனர்த்த சூழ்நிலையிலும் கிராம உத்தியோகத்தர்கள் சிறப்பாகச் சேவையாற்றுவார்கள் என்ற நம்பிக்கையுள்ளது எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

மேலும், பாதிக்கப்பட்ட பயனாளிக்கு நிவாரணம் கிடைக்க வேண்டும் என்பதே அரசின் முக்கிய நோக்கம் எனவும், இதுவே அனைவரினதும் கரிசனையாகவுள்ளது எனவும், மாவட்ட ரீதியாகஒரேநடைமுறைபின்பற்றப்படவேண்டும் என்ற தெளிவான விடயம் பிரதேச செயலாளர்களுடனான கலந்துரையாடலில் அறிவுறுத்தப்பட்டது எனவும், அதேபோன்று ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள அனைத்து கிராம சேவையாளர் பிரிவுகளிலும் இவ்வாறு ஒரே நடைமுறையே பின்பற்றப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

மேலும், இதன் அடிப்படையில் பல்வேறு சிரமங்கள், துன்பங்களுக்கு மத்தியில் பாதிக்கப்பட்ட மக்கள் துன்பப்படக் கூடாது என்ற ஒரே நோக்கத்துக்காக கிராம அலுவலர்கள் இரவு பகல் பாராது மக்களுக்காகச் சேவையாற்றி வருகின்றனர் என்பதை அரசாங்க அதிபர் குறிப்பிட்டதுடன், ஆனாலும் ஒரு சிலரின் பொறுப்பற்ற செயற்பாடுகள் ஒட்டுமொத்த அலுவலர்களையும் குறை சொல்லும் நிலை ஏற்படக் காரணமாக அமைந்துள்ளது எனவும், அனைவரும் சரியான பயனாளிக்குக் கொடுப்பனவு சென்றடைவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

மேலும், தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைவாக, கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அரசாங்க அதிபரால் தெளிவுபடுத்தப்பட்டது.



## கோர விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சென்ற நகர சபைக்குச் சொந்தமான உழவு இயந்திரத்தைக் கடந்து செல்ல முற்பட்ட வேளையில், பின்னால் இருந்து வந்த டிப்பர் வாகனம் மோதி இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த 9 வயது சிறுமி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிள் செலுத்திய தாய் மற்றும் உயிரிழந்த சிறுமியின் 4 வயதுடைய சகோதரி காயமடைந்து ஹொரண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த சிறுமி, ஹொரண டொம்பெட்ரிக் மகா வித்தியாலத்தின் தரம் 4 இல் கல்வி கற்கும் மாணவியான சந்தலி அமாயா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் தொடர்கின்றன.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக் குழுவின் இயக்குநர் நாயகத்துக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

இதுதான் இலங்கையின் சட்ட முறைமையின்கேலிக்குரியநிலைமை(Mockery of Justice) ஆகும்.

சில ஆயிரம் ரூபா நஷ்டத்தை அரசுக்கு ஏற்படுத்திய அல்லது சில ஆயிரம் ரூபா லஞ்சம் வாங்கிய அரச ஊழியர்கள் அவற்றிலிருந்து தப்ப முடியாமல் சிறைவாசமும் தண்டனையும் அனுபவிக்க, பல்லாயிரம் கோடி ரூபா சுருட்டியவர்கள் அவற்றை திரும்ப கையளித்து விட்டு சுதந்திர மனிதர்களாக – சுத்தவாளிகளாக – அப்பாவிகளாக – உலவ முடியும்.

இலங்கையின் மிகச்சிறந்த சட்டம் என்று பல தரப்புக்களினாலும் விதைந்துரைக்கப்படுகின்ற 'ஊழல் தடுப்புச் சட்டத்தில்'தான் இத்தகைய 'ஊழல் முறைமை' சட்ட ஏற்பாடாகப் பொதிந்து கிடக்கின்றது. அந்தச் சட்டத்தின் 67 ஆவது பிரிவு இதை விவரிக்கின்றது.

கிரேக்க நாட்டின் பொருளாதாரம் மிக மோசமாகிச் சிதறிப் போகும் நிலையில் இருந்த சமயத்தில் அந்த நாட்டிடம் இருந்து முறையற்ற விதத்தில் பிணைமுறி வாங்கியதன் மூலம் 2011 – 2012 ஆம் ஆண்டுகளில் இலங்கை அரசுக்கு 180 கோடி ரூபாவுக்கும் மேல் தெரிந்து கொண்டே நஷ்டம் ஏற்படுத்தினர் என அச்சமயத்தில் மத்திய வங்கி ஆளுநராக இருந்த அஜித் நிவார்ட் கப்ராலுக்கும் ஏனைய சில அதிகாரிகளுக்கும் எதிராகக் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு கடந்த வாரத்தில் வாபஸ் பெறப்பட்டு, அவர்கள் விடுவிக்கப்பட்ட நிலையில் இந்த விவகாரம் பற்றிய விடயம் பெரிதாகப் பேசப்படுகின்றது.

இப்படி அரசுக்கு இழப்பை ஏற்படுத்தியமைக்காக 2014 இல் அஜித் நிவார்ட் கப்ராலுக்கும் சிலருக்கும் எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டதாயினும் நீதிமன்றம் அதை விசாரணைக்கு ஏற்காமல் நிராகரித்துவிட்டது.

ஆயினும், இந்த கிரேக்க பிணைமுறி ஊழல் வழக்கு அதன் பின்னர் நல்லாட்சி அரசின் காலத்தில் இடம்பெற்ற ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியான இலங்கை மத்திய வங்கி பிணைமுறி ஊழல் மோசடி விவகாரத்தினால் அடங்கிப் போய் இருந்தது.

எனினும் பின்னர் அஜித் நிவார்ட் கப்ராலுக்கும் ஏனையோருக்கும் எதிராக இவ்விடயத்தை ஒட்டி வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாயினும், குற்றப்பத்திரத்தில் இருந்த சில தவறுகள் காரணமாக அந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டு பின்னர் புதிய வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அந்தப் புதிய வழக்கே இப்போது வாபஸ் பெறப்பட்டிருக்கின்றது. அப்படி வாபஸ் பெறப்பட்ட விடயமே சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

வழக்கு என்ன அடிப்படையில் விலக்கப்பட்டது என்பது தொடர்பான நீதிமன்ற பதிவுகள் இன்னும் வெளியாகவில்லை.

ஆனால் தாங்கள் சுத்தவாளிகள் என்று விடுவிக்கப்பட்டு விட்டார்கள் என்ற ரீதியில் அஜித் நிவார்ட் கப்ராலும் ஏனையோரும் அவர்களது சட்டத்தரணிகளும் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

ஆனால், இந்தப் பிணைமுறி மோசடி விடயத்தில் அரசுக்கு ஏற்படுத்திய 180 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட இழப்பை எதிராளிகள் செலுத்துவதற்கு இணங்கிய அடிப்படையில்தான் அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள் என்றும், மூன்று மாத காலத்துக்குள் அந்தப் பணத்தை அவர்கள் அரச கணக்கில் வைப்பிலிடத் தவறினால் அவர்களுக்கு எதிராக மீண்டும் லஞ்ச, ஊழல் முறைகேடுகளை விசாரிக்கும் ஆணைக்குழு இதே விடயத்துக்காகப் புதிதாக வழக்கு தொடர்ந்து நடவடிக்கை எடுத்துத் தண்டிக்கும் என்றும் ஆணைக்குழு தரப்பில் கூறப்படுகிறது.

எது உண்மை என்ற விடயம் மூன்று மாத காலத்துக்குள் தீர்மானம் ஆகிவிடும்.

அரசுக்கு ஏற்பட்ட இழப்பை மீளப் பெற்றுக் கொள்வதற்காக, இப்படி முடிவெடுத்து, குற்றவாளிகளை விடுவித்து, இழப்பை அறவீடு செய்யும் அதிகாரம் இந்தச் சட்டத்தின் கீழ் ஆணையத்தின் இயக்குநர் நாயகத்துக்கு இருக்கின்றது என்பது உண்மைதான்.

அரச சொத்தை சூறையாடிய அல்லது அரசுக்கு இழப்பை ஏற்படுத்திய நெத்தலிகள் எல்லாம் சிறையில் வாட, பல்லாயிரம் கோடிகளைச் சுருட்டிய திமிங்கலங்கள் அவற்றை திரும்ப செலுத்துவதன் பேரில் தப்பிக்க முடியும் என்பது நீதி எங்கோ இடிப்பதை வெளிப்படுத்தி நிற்கிறது என்பதுதான் என்னுடைய கருத்து.

சரி. ஆணைக்குழு எதிர்பார்ப்பது போல அரசுக்கு ஏற்படுத்திய 180 கோடிக்கு மேற்பட்ட இழப்பை – அதற்கான நிதியை மீளச் செலுத்துவதன் மூலம் அஜித் நிவார்ட் கப்ராலும் ஏனையோரும் இந்த வழக்கில் இருந்து தப்பித்தாலும், மீளச் செலுத்துவதற்கான அந்த 180 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட பணம் எங்கிருந்து பெறப்பட்டது என்று அடுத்த கொழுக்கி அவர்களுக்கு எதிராகப் பாயாதா என்பதையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

---

## மட்டு.அம்பிட்டிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதையடுத்து இந்தத் தேரர் தெரிவித்த இந்த வன்முறையான கருத்துக்கு எதிராக 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி கொழும்பு புறக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் சட்டத்தரணி தனுக்க றனஞ்சக என்பவர் முறைப்பாடு செய்தமையுடன், சிவில் மற்றும் அரசியல் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் தொடர்பான சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கக் கோரி மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கலும் செய்திருந்தார்.

இந்த வழக்கு தொடர்பாக சட்டமா அதிபருக்கு கோப்புக்கள் அனுப்பப்பட்ட நிலையில் கடந்த மாதம் சட்டமா அதிபர் திணைக்களம் சம்பந்தப்பட்ட தேரரைக் கைது செய்து தொடர் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கியது.

இந்தநிலையில் வழக்கு கடந்த 8ஆம் திகதி மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது தேரர் நீதிமன்றத்தில் சமுகமளிக்காத நிலையில், வழக்கு தொடுநர் சார்பாக ஆஜராகிய சட்டத்தரணி சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுரையின்படி தேரர் இதுவரை கைது செய்யப்படவில்லை என்பதை நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இதையடுத்து நீதிவான் அடுத்த வழக்கு தவணை 15ஆம் திகதிக்கு (நேற்றைய தினத்துக்கு) ஒத்திவைத்து, அதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட தேரரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார். அத்துடன் தேரரை இதுவரை நீதிமன்றத்தில் ஏன் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை என்பதற்கான காரணம் தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரை அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நீதிவான் கட்டளையிட்டிருந்தார்.

இந்தநிலையில் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்காக நேற்று திங்கட்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்டது. நேற்று தேரர் ஆஜராகாத நிலையில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சார்பாக முதலாம் தரம் கொண்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், மட்டு. தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆஜரானார். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உயர்நீதிமன்ற வழக்கு ஒன்றுக்குச் சென்றுள்ளார் எனவும், அதனால் நீதிமன்றத்தில் இன்று ஆஜராக முடியவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட தேரர் தங்கியிருக்கும் மற்றும் மறைந்திருக்கும் இடம் எனச் சந்தேகிக்கப்படும் மங்களகம கௌவ்லியாமடு மற்றும் சின்னவத்தை விகாரைப் பகுதிக்குத் தேடிச் சென்றோம் எனவும், அவர் அங்கு இல்லை எனவும், அவர் மறைந்திருக்கும் இடத்தைப் பொலிஸார் தேடி வருகின்றனர் எனவும் நீதிவானிடம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

இதையடுத்து அம்பிட்டிய சுமண ரத்ன தேரரைக் கைது செய்வதற்காக நீதிமன்றப் பிடிவிறாந்து பிறப்பித்த நீதிவான், மேற்படி தேரர் வெளிநாடு செல்வதற்குப் பயணத் தடையையும் விதித்து கட்டாணை வழங்கி உத்தரவிட்டு எதிர்வரும் ஜனவரி 26ஆம் திகதி வரை வழக்கை ஒத்திவைத்தார்.

---

## தம்மிக்கவுக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ரணதுங்க ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

2017 – 2018ஆம் ஆண்டுகளுக்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு எரிபொருள் கொள்வனவு செய்ய இருந்த 3 நீண்டகால கேள்வி மனுக்களை இரத்துச் செய்து, அதற்குப் பதிலாக அதிக விலையின் கீழ் உடனடி கேள்வி மனுக்களைச் செயற்படுத்தியதன் ஊடாக, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சுமார் 800 மில்லியன் ரூபா நட்டத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் இலஞ்ச, ஊழல் விசாரணைக் குழுவினரால் நேற்று கைது செய்யப்பட்ட தம்மிக்க ரணதுங்க, கொழும்பு பிரதான நீதிவான் அசங்க எஸ். போதரகம முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் நீதிவான் பிணையில் விடுவிப்பதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அத்துடன் வெளிநாடு செல்வதற்கும் தடை விதித்த நீதிவான், அவரது அமெரிக்க மற்றும் இலங்கைப் பயண ஆவணங்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்தார்.

இதற்கிடையில், இந்த வழக்கு தொடர்பாக முன்னாள் பெற்றோலிய வள மேம்பாட்டு அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவைச் சந்தேகநபராகக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு நீதிவானிடம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஒன்றாக முன்னோக்கி

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அசையும் தேர்

மிக நீண்ட காலம் எதிர்பாக்கப்பட்ட ஓர் அபிவிருத்திப் பணி - 'நாளை, நாளை' என்று இழுபட்டு, இப்போது ஒருவாறு தேர் அசையத் தொடங்கியது போல முன்நகர்வு ஆரம்பித்திருக்கின்றது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கான புதிய பயணிகள் முனையக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம்தான் நேற்று நடைபெற்றிருக்கின்றது.

பலாலியில் உள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை மேம்படுத்துவதற்கான திட்டத்தின் ஒரு பகுதி தான் இது.

சர்வதேச பயணிகள் விமானப் போக்குவரத்தில் ஈடுபடும் பாரிய விமானங்கள் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கிச் செலக் கூடியதாக அந்த விமான நிலையம் மேம்படுத்தப்பட வேண்டும்.

விமான நிலையத்தின் ஓடுபாதையைத் தரம் உயர்த்தி, நீளமாக்குவது இந்தப் பணியில் முக்கிய கட்டமாகும்.

ஆயினும், அப்படிப் பாரிய விமானங்கள் அதிக எண்ணிக்கையான பயணிகளுடன் வரக்கூடிய நிலையை யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் எட்டுமாயின், அச்சமயத்தில் அந்த விமான நிலையத்தின் ஊடாக பயணிக்கும் விமானிகளைக் கையாள்வதற்கு பயணிகள் முனைய கட்டடம் அதற்குரிய வகையில் மேம்படுத்தப்பட்டிருப்பதும் கட்டாயமாகும்.

அந்த வகையில் நேற்று ஆரம்பித்த முயற்சி மிக முக்கியமானது என்பது தெளிவானது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை தரம் உயர்த்தி சர்வதேச பயணிகள் ஒரே சமயத்தில் அதிக எண்ணிக்கையில் வந்து போகக் கூடியதாக - வழமையான பாரிய பயணிகள் விமானங்கள் வந்து செல்லக்கூடியதான - நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்ற முயற்சி நீண்ட காலமாக வலியுறுத்தப்பட்டு வந்தது.

யாழ்ப்பாணம் விமான நிலையத்திலிருந்து சில மைல் தொலைவில் உள்ள நமது அயல் தேசமான இந்தியா இதற்கு தானாக முன்வந்து நன்கொடையாக நிதி உதவி அளிக்கவும் தயாராக இருந்தது. இருக்கின்றது.

ஆயினும், தென்னிலங்கையில் இருந்த அரசியல் தலைமைத்துவங்கள் இந்தத் திட்டத்திற்கு இணங்கி வர பின்னடித்தன.

அண்மைக் காலம் வரை சிவில் விமான போக்குவரத்து அமைச்சையும் தம் வசம் வைத்திருந்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தொடர்ந்து முட்டுக்கட்டை போட்டு வந்தார். அது குறித்து பல தடவைகள் தொடர்ந்து சுட்டிக் காட்டி வந்தோம்.

இப்போது அந்த அமைச்சு அவரிடம் இருந்து விலக்கப்பட்டமையை அடுத்து யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை மேம்படுத்துவதற்கான திட்டம் முன்நகரத் தொடங்கியிருக்கின்றது. நேற்றைய அடிக்கல் நாட்டு வைபவத்தை அதன் குறியீடாகக் கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் மேம்பாடு அடைந்து, அதிக பயணிகள் வந்து செல்லும் நிலைமை ஏற்படுவது, இதுவரை காலமும் இவ் விடயத்தில் முன்னிலையில் இயங்கி வரும் கட்டு நாயக்கா சர்வதேச விமான நிலையத்தைப் பாதிக்கும் என்று கருதுவது அர்த்தமற்றது. அதேபோல யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் மேம்பாடு வடக்குப் பிராந்தியத்தை மேன்மை அடையச் செய்துவிடும் என்று கருதி அதை இனவாத நோக்கோடு பார்த்து அதற்கு எதிராக விசனம் கொண்டு நடப்பதும் அபத்தமானது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் மேம்பாடு, இப்போது தன்னுடைய அந்நிய செலாவணி ஈட்டலுக்காக சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் வருகையை எதிர்பார்த்துத் தவமிருக்கும் இலங்கைக்கு மேலும் வரப்பிரசாதமாக அமையும் என்பதுதான் முக்கிய விடயமாகும்.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் அபிவிருத்தியையும் மேம்பாட்டையும் இனவாதத்தோடு - குறுகிய பிரதேச வாதத்தோடு - முடிச்சு போட்டு பார்ப்பது, நாட்டின் வளர்ச்சிக்கு உகந்ததல்ல.

நேற்று ஆரம்பித்த திட்டம் எந்தக் குந்தகமும் குறுக்கே வராமல் - எந்தத் தலையீடுகளும் இன்றி - விரைந்து முன்னெடுக்கப்பட்டு முடிக்கப்பட வேண்டும். அதுதான் முக்கியமானது.



# மூங்கிலாறில் ஐஸ் போதைப்பொருள் விற்பனை கணவன் - மனைவி உட்பட ஐவர் நேற்றுக் கைது

(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மூங்கிலாறு வடக்கு பகுதியில் கணவன் – மனைவி உட்பட ஐந்து பேர் ஐஸ் போதைப்பொருளுடன் அதனை வீட்டில் விற்பனைக்குத் தயாராக வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்றையதினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது நடவடிக்கையின் போது சந்தேக நபர்களிடமிருந்து 2 வாள்கள், 61,000 ரூபா பணம் மற்றும் சுமார் 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 'ஐஸ்' போதைப்பொருள் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அடசூரியவின் ஆலோசனையின் கீழ் மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திலினவின் வழிகாட்டலில் மாவட்ட புலனாய்வு பிரிவின் உத்தியோகத்தர் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆருஸிற்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவின் உத்தியோகத்தரான பொலிஸ் சார்ஜன்ட் ரத்னாயக்க (37109) தலைமையில், பொலிஸ் கான்ஸ்டபிள்கள் சந்தரூபன் (12334), கிருஷாந்த் (25253), டில்ஷான்(100585), பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் றுவந்தி (13027) மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி பிரியந். (80232) ஆகியோர் இணைந்து இந்தச் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். சந்தேகநபர்கள் இன்றையதினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.











# வவுனியாவில் பொலிஸாரின் கட்டளையை மீறிச் சென்ற மோ.சைக்கிள் காருடன் மோதி விபத்து; இருவர் காயம்

(வவுனியா நிருபர்)

வவுனியா வைரவபுளியங்குளம் பகுதியில் பொலிஸாரின் கட்டளையை மீறிச் சென்ற மோட்டார் சைக்கிள் காருடன் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்துள்ளனர் என வவுனியாப் பொலிஸெ தெரிவித்தனர்.

வவுனியா, வைரவபுளியங்குளம், வைரவர் கோயில் வீதி ஊடாக இளைஞர்கள் வேகமாக மோட்டார் சைக்கிளில் சென்றபோது அப் பகுதியில் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட போக்குவரத்து பொலிஸார் அவர்களை நிறுத்த முற்பட்ட போது பொலிஸாரின் கட்டளையை மீறி மோட்டார் சைக்கிள் வேகமாக பயணித்துள்ளது. அது ரயில் நிலைய வீதியில் இருந்து வைரவர் கோவில் வீதி ஊடாகச் சென்று வைரவ கோயிலுக்கு முன்பாக உள்ள ஒழுங்கையில் திரும்ப முற்பட்ட கார் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# சுகாதாரப் பரிசோதகர்களின் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்த 2பேர் வவுனியாவில் கைது

(கி.வசந்தன்)

வவுனியாவில் சுகாதாரப் பரிசோதகர்களின் நடவடிக்கைகளுக்கு இடையூறை ஏற்படுத்தினர் என்க் கூறப்படும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என நெளுக்குளம் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியாவில் பெய்து வந்த மழை காரணமாக வெள்ளநீர் தேங்கி நிற்பதால் டெங்கு நுளம்பு பரவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்தும் விசேட வேலைத்திட்டத்தை சுகாதாரப் பரிசோதகர்கள் முன்னெடுத்துள்ளனர்.

இதன் ஒரு கட்டமாக வவுனியா, பட்டாணிச்சூர் முதலாம் ஒழுங்கையில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் சுகாதார பரிசோதகர்கள் ஈடுபட்டனர். அந்தப் பகுதியில் உள்ள வீடு ஒன்றைப் பரிசோதனை செய்யும் போது அந்த வீட்டில் டெங்கு நுளம்புக இனங்காணப்பட்டுள்ளன.



இதனை அடுத்து அந்த நுளம்புகளைக் கட்டுப்படுத்தி அப்பகுதியைச் சுத்தம் செய்து தமக்கு தெரியப்படுத்துமாறு சுகாதார பரிசோதர்களால் அறிவுறுத்தப்பட்ட போது சுகாதார பரிசோதர்களுடன் வீட்டு உரிமையாளர்கள் தர்க்கத்தில் ஈடுபட்டமையுடன், சுகாதார பரிசோதர்களின் கடமைக்கும் இடையூறை ஏற்படுத்தியுள்ளனர்.

இதையடுத்து சுகாதார பரிசோதகர்கள் நெளுக்குளம் பொலிஸாருக்குத் தெரியப் படுத்தியமையை அடுத்து, சம்பவ இடத்துக்கு சென்ற நெளுக்குளம் பொலிஸார் வீட்டு உரிமையாளரை பொலிஸ் நிலையம் வருமாறு தெரிவித்தனர்.

இருப்பினும் பொலிஸாருடனும் வீட்டு உரிமையாளர்கள் முரண்பட்டுள்ளனர் என்று கூறப்பட்டது..

இதனையடுத்து, சுகாதார பரிசோதகர்களின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தினர் என இருவரும் கைது செய்யப்பட்டனர். இருவரையும் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# வடக்கு - கிழக்கில் 18 மாதங்களாகக் காத்துக் கிடக்கும் சீனாவின் 500 பொருத்து வீடுகளைப் பயன்படுத்துங்கள்

## இடரைப்போக்க வாய்ப்பு என்கின்றார் சுமந்திரன்

(ந.லோகதயாளன்)

வடக்கு கிழக்கில் தேங்கி கிடக்கும் சீனப் பொருத்து வீடுகளை அனர்த்தம் காரணமாக பாதிப்புற்று நிர்க்கதியாகியுள்ள மீனவர்களுக்கு வழங்கி இடரைப் போக்க அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கில் மீனவ மக்களின் வாழ்விடத்திற்காக 2024-07-07 அன்று சீனாவின் பொருத்து வீடுகள் வடக்கிற்கு எடுத்து வரப்பட்டன.

இவ்வாறு எடுத்து வரப்பட்டவை மாவட்டங்கள் தோறும் வெய்யிலிலும் மழையிலும் இன்று வரைக் காத்துக் கிடக்கின்றன.

இவற்றை உடனடியாக அனர்த்தப் பாதிப்பிற்கு உள்ளான மக்களிற்கோ அல்லது கடற்றொழில் அமைப்புக்களுக்கோ வழங்குவதன் மூலம் உடனடிப் பிரச்சினைக்குத் தீர்வு எட்ட முடியும். குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் அதிக மீனவர்களும், மீனவ அமைப்புக்களும் பாதிப்பைக் கண்டுள்ள இச்சமயத்தில் பொருத்து வீடுகள் அநாதரவாகக் கிடக்கின்றன.

இதனால் அவற்றைப் பொருத்தி அமைப்பதற்கான செலவுக்குரிய நிதியை விடுவித்து பொருத்தி வழங்



கினால் அமைப்புக்கள் தங்கு தடை இன்றிச் செயல்பட போதிய வாய்ப்பு ஏற்படும் என்பதைக் கருத்தில் எடுத்து அரசாங்கம் செயல்பட முன் வர வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார்.





# காலை உணவுக்குப் புட்டுத் தயாரித்துத் தரக் கேட்ட கணவனை வெட்டிக்கொலை செய்துவிட்டு கத்தியுடன் வந்து மனைவி சரண்

## மட்டக்களப்பு வாகனேரியில் நேற்று சம்பவம்

(கனகராசா சரவணன்)

காலை உணவுக்குப் புட்டுத் தயாரித்துத் தருமாறு கோரிய கணவனை கத்தியால் கழுத்தை வெட்டியும் கோடாரியால் மண்டையைப் பிளந்தும் கொலை செய்துவிட்டு விட்டு பொலிஸ் நிலையத்தில் கத்தியுடன் சென்று சரணடைந்த மனைவி கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை மட்டக்களப்பு வாகனேரியில் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்

வாகனேரி விஷ்ணு கோவில் வீதியைச் சோந்த 46 வயதுடைய விவசாயியான - நான்கு பிள்ளைகளின் தந்தையான - வைரமுத்து நவராசா என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இது பற்றி தெரியவருவதாவது:-

சம்பவத்தில் உயிரிழந்தவர் வழமை போல வேளாண்மைக் காவலுக்காக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு வீட்டை விட்டு வெளியேறி வயலுக்கு சென்று, நேற்றுக் காலையில் வீடு திரும்பியுள்ளார்.

மனைவியிடம் காலை உணவாகப் புட்டுத் தயாரித்துத் தருமாறு கோரியுள்ளார். இதனைத் தொடர்ந்து கணவன் - மனைவிக்கு இடையே வாக்குவாதம் ஏற்பட்ட நிலையில் அது சண்டையாக மாறியிருக்கின்றது. பகல் 11.30 மணி அளவில் மனைவி கத்தியால் கணவரின் கழுத்தில் தாக்கியமையுடன் கோடாரியால் மண்டையைப் பிளந்திருக்கின்றார். இதையடுத்து அவர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார்.

இதையடுத்து, தாக்குதலை மேற்கொண்ட பெண் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் கத்தியுடன் சென்று சரணடைந்தார். தான் கணவனை வெட்டிக் கொலை செய்துள்ளார் என அவரே குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில் அவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரியவந்தது.

சம்பவ இடத்திற்கு தடயவியல் பிரிவு பொலிஸார் வரவழைக்கப்பட்டு சம்பவம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கான நீதிமன்ற அனுமதி பெறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக நேற்று பிற்பகல் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# வடக்குக்கு இங்கிலாந்தின் உதவிகள்

வடக்கில் சூறாவளியால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு இங்கிலாந்து உதவிகள் விநியோகிக்கப்பட்டன.

சூறாவளியைத் தொடர்ந்து இலங்கையின் வடக்கில் இங்கிலாந்து உதவி விநியோகத்தை ஆதரிப்பதற்காக டிசம்பர் 13 சனிக்கிழமையன்று, பதில் பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் தெரசா ஓ'மஹோனி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார்.

அமெரிக்க விமானப்படை C-130 சூப்பர் ஹெர்குலஸ் விமானத்தின் ஆதரவுடன், அமெரிக்க துணைத் தூதரகத் தலைவர் ஜெய்ன் ஹோவெல் மற்றும் ஆஸ்திரேலிய உயர் ஸ்தானிகராலய மனிதாபிமான நிபுணர் லாரா நிக்கல்சன் ஆகியோர் இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலிய உதவிகளை வழங்குவதற்காக பதில் உயர் ஸ்தானிகருடன் இணைந்தனர்.

இலங்கை விமானப்படையின் தரை ஆதரவு பிரிவுகளுடன் இணைந்து பணியாற்றிய இங்கிலாந்து உதவி, மன்னார், திருகோணமலை மற்றும் முல்லைத்தீவில் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு வழங்குவதற்காக UNOPS SriLanka மற்றும் விருத்தி கூட்டாளர்களுக்கு வழங்கப்பட்டது. மன்னாரில் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு இங்கிலாந்தின் உதவிகளை விநியோகிப்பதில் பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகரகக் குழுவும் UNOPS இலங்கை மற்றும் விருத்தியுடன் இணைந்தது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மற்றும் செம்பிறை சங்கங்களின் கூட்டமைப்பு, UNOPS இலங்கை, விருத்தி மற்றும் பிற மனிதாபிமான பங்காளிகள் ஊடாக நிவாரண முயற்சிகளுக்கு +1 மில்லியன் ($1.32 மில்லியன்) நிதியை இங்கிலாந்து உறுதியளித்துள்ளது.

களத்தில் வழங்கப்படும் இங்கிலாந்து உதவிகளுக்கு மேலதிகமாக, ஐக்கிய நாடுகள் சபையின் மத்திய அவசரகால மீட்பு நிதி (CERF) உட்பட உலகளாவிய நிதிகள் மூலமாகவும் இங்கிலாந்து பங்களிக்கிறது. சூறாவளியால் பாதிக்கப்பட்ட இலங்கையர்களை ஆதரிப்பதற்காக CERF $4.5 மில்லியன் (இலங்கை ரூபா 1.38 பில்லியன்) ஒதுக்கீட்டை அறிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டில் +52 மில்லியன் மற்றும் மொத்தம் $1.9 பில்லியனுக்கும் அதிகமான நிதியை வழங்கி, CERF இன் மிகப்பெரிய ஒட்டுமொத்த நன்கொடையாளராக இங்கிலாந்து திகழ்கிறது.

சூறாவளியின் பேரழிவு தாக்கங்களிலிருந்து இலங்கை மீண்டு வருவதால், உடனடி ஆதரவையும் ஆரம்பகால மீட்பு உதவிகளையும் வழங்குவதற்காக இங்கிலாந்தின் உதவி நாடு முழுவதும் உள்ள சமூகங்களைத் தொடர்ந்து சென்றடைகிறது.












# அகில இலங்கை கம்பன் கழகத்தின் நிதி உதவியுடன் மாந்தை மேற்கில் நூறு குடும்பங்களுக்கு நிவாரணம்

**(மன்னார் நிருபர்)**

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் நிதி உதவியுடன் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று திங்கட்கிழமை மாந்தை மேற்கில் தெரிவு செய்யப்பட்ட நூறு குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைத்துள்ளார்.

மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் பிரேம் குமார் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

மாந்தை மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அடம்பன் வடக்கு, வாமதேவ புரம், புளியங்குளம் மற்றும் வேப்பங்குளம் ஆகிய கிராமங்களில் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களுக்கே இந்த உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

















# புன்னைச்சோலை கிராம உத்தியோகத்தரை இடமாற்றுமாறும் நிவாரணம் வழங்குமாறும் கோரி பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டம்

**(கனகராசா சரவணன் )**

மட்டக்களப்பில் அனர்த்தினால் பாதிக்கப்பட்ட புன்னைச்சோலை கிராம சேவகர் பிரிவிலுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறும் கிராம உத்தியோத்தரை இடம் மாற்றுமாறும் கோரி நேற்று மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அங்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு இவ்விடயம் தொடர்பாக விசாரணை செய்து, பாதிப்புகள் தொடர்பாக உண்மைத் தன்மைய்சி அறிந்து மக்களின் கோரிக்கையை நிறைவேற்றுவார் என்ச் வழங்கிய உறுதிமொழியை அடுத்து முற்றுகைப் போராட்டம் கைவிடப்பட்டது

புன்னைச்சோலைக் கிராமத்தில் அனர்த்தத்தினால் பாதிக்கபட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் பணம் வழங்கவில்லை எனத் தெரிவித்து பாதிக்கப்பட்ட மக்கள் நேற்றுக் காலை 10 மணிக்கு புன்னைச்சோலை பகுதியில் ஒன்று திரண்டனர்.

அங்கு ஒன்று திரண்ட நூற்றுக் கணக்கான பெண்கள் கிராம உத்தியோகத்தரை இடமாற்றுமாறும் , பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் பணம் வழங்குமாறும் கோரி அங்கிருந்து ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை ஆரம்பித்தனர். மாமாங்கம் ஆலய வீதி வழியாக சென்று, பார் வீதியை அடைந்து, அங்கிருந்து அரசடி வீதிச் சுற்று வட்டத்தைக் கடந்து, நகர மணிக்கூட்டு கோபுரத்துக்குச் சென்று, அங்கிருந்து மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தை சென்றடைந்து அதனை முற்றுகையிட்டனர்.

இதனையடுத்து அங்கு சென்ற தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினார். கிராம உத்தியோகத்தர் தொடர்பாகத் தீர விசாரணை செய்வதுடன் நிவாரணம் தொடர்பாக உண்மை தன்மையைக் கண்டறிந்து மக்களின் கோரிக்கையை நிறைவேற்றுவார் என அவர் தெரிவித்த வாக்குறுதியை ஏற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.













# மன்னார் நகர சபையின் நேற்றைய மாதாந்த அமர்விலும் அமளிதுமளி!

## சபை உறுப்பினர்கள் ஐவர் வெளிநடப்பு

**(மன்னார் நிருபர்)**

மன்னார் நகர சபையின் ஏழாவது மாதாந்த அமர்வு நேற்றைய தினம் திங்கட்கிழமை காலை 10 மணியளவில் நகர சபையின் தலைவர் டானியல் வசந்தன் தலைமையில் இடம்பெற்ற போது சபையில் அமளி துமளி ஏற்பட்டது. ஐந்து உறுப்பினர்கள் சபை அமர்வில் இருந்து வெளி நடப்புச் செய்தனர்.

சபை அமர்வு ஆரம்பமாகி சிறிது நேரத்திலேயே ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது.

தவிசாளர் உறுப்பினர்களின் கருத்துகளுக்கு மதிப்பளிப்பதில்லை என்பது உட்பட பல குற்றச்சாட்டுகளை முன் வைத்து சபை உறுப்பினர்கள் 5 பேர் சபையைப் புறக்கணித்து உடனடியாக வெளிநடப்பு செய்தனர்.

வெளியேறிய உறுப்பினர்களை தவிர ஏனைய உறுப்பினர்களுடன் தவிசாளர் தொடர்ந்து சபை அமர்வை முன்னெடுத்துச் சென்றார்.

வெளிநடப்பு செய்த உறுப்பினர்கள் சபையின் தவிசாளருக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன் வைத்துத் தமது கருத்துக்களை தெரிவித்தனர்.














# வடக்கு, கிழக்கு மறுவாழ்வு அமைப்பினர் நேரில் சென்று புசல்லாவ டெல்டா தோட்டத்தில் உதவி வழங்கினர்

அண்மைய அனர்த்தத்தின் போது ஏற்பட்ட மண்சரிவுச் சம்பவத்தினால் கண்டி மாவட்டத்தின் புசல்லாவ டெல்டா தோட்டப்பகுதியில் பல குடும்பங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்புக் கருதி 42 குடும்பங்கள் அருகிலுள்ள பாடசாலை ஒன்றில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ளன.

தங்கள் வீடுகள், உடமைகள் மற்றும் வாழ்வாதாரங்களை இழந்த நிலையில், அவர்கள் அத்தியாவசிய தேவைகளுக்காக பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட மக்களின் அவசர தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கில், வடக்கு, கிழக்கு மறுவாழ்வு அமைப்பு மனிதநேய உதவிகளை வழங்க முன்வந்துள்ளது. அமைப்பின் ஒழுங்கமைப்பில், இந்த 42 குடும்பங்களுக்கு தேவையான உலருணவு பொதிகள், புத்தாடைகள் மற்றும் அடிப்படை மருந்துப் பொருள்கள் நேற்று வழங்கப்பட்டன.

இந்த நிவாரணப் பொருள்களை, வடக்கு கிழக்கு மறுவாழ்வு அமைப்பின் இயக்குநர் சுகிர்தனும் அமைப்பின் உறுப்பினர்களும் இணைந்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நேரடியாக கையளித்தனர். நிவாரணப் பொருர்களை பெற்றுக்கொண்ட மக்கள், தங்களின் கடினமான காலத்தில் உதவி செய்த அமைப்புக்கும் அதன் உறுப்பினர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்தனர்.


















# கம்பளை கணபதி தோட்ட மக்களுக்கு உதவி

கண்டி, கம்பளை பகுதியில் உள்ள கணபதி தோட்டத்தைச் சேர்ந்த மாவத்துற பாலர் பாடசாலையில் தற்காலிகமாக தங்கியுள்ள – சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட – மக்களுக்கு வடக்கு, கிழக்கு மறுவாழ்வு அமைப்பால் வெள்ள நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன.




# நாட்டின் மொத்தக் கிராம சேவையாளர்களையும் பாதிக்கும் வகையில் செய்திகள் வெளியிடுகின்றமையை நிறுத்துங்கள்

## எனினும் தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கை அவசியம் என்கிறார் இம்ரான் எம்.பி.

(ஏ.எச்.ஹஸ்பர்)

நாட்டிலுள்ள ஒட்டு மொத்தக் கிராம உத்தியோகத்தர்களுக்கும் மனஅழுத்தம் ஏற்படும் வகையில் செய்திகள் வெளியிடப்படுவது நிறுத்தப்பட வேண்டும். அதேவேளை தவறு செய்வோருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேணடும் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

ஊடகங்களுக்குத் தாம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:–

கிராம உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறைப்பாடு செய்யுங்கள் என்ற தொனிப்பொருளில் சில செய்திகள் ஊடகங்களிலும், சமூக வலைத்தளங்களிலும் அண்மைக் காலமாகப் பரவி வருகின்றன. இதனை வாசிப்போர் எல்லாக் கிராம உத்தியோகத்தர்களும் தவறு செய்கின்றனர் என்ற மனப் பதிவைப் பெறுகின்றனர். இதனால் நேர்மையான கிராம உத்தியோகத்தர்கள் பலர் பெரும் மனக் கவலை அடைந்துள்ளனர்.

பெரும் இன்னல்களுக்கு மத்தியிலேயே கிராம உத்தியோகத்தர்கள் பணி புரிகின்றனர். சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் கூட உள்ளன. அனர்த்த காலத்தில் ஒவ்வொரு குடும்பத்தையும் ஒருசில நாள்களில் கிராம உத்தியோ



கத்தர் நேரில் சென்று அவதானிப்பது என்பது சிரமமான காரியம். மனச்சாட்சியுள்ள எவரும் இதனை ஏற்றுக் கொள்வர்.

அரசியல்வாதிகள் மக்களைக் கவரும் வகையில் ஊடகங்களில் அறிக்கை விடுகின்றனர். ஆனால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில் சில மட்டுப்பாடுகள் உள்ளன. எனவே கிராம உத்தியோகத்தர்கள் அரசியல்வாதிகளின் அறிக்கைக்கேற்ப செயற்படுவதா, சுற்றறிக்கைக்கேற்ப செயற்படுவதா என்ற கேள்வி உள்ளது.

சுற்றறிக்கையை மீறி அரசியல்வாதிகளின் செய்திகளுக்கேற்ப செயற்பட்டால் கணக்காய்வு திணைக்களத்தின் நடவடிக்கைக்கு ஆளாகும் நிலை உள்ளது. இப்படி ஓர் இக்கட்டான சூழ்நிலையில் தமது தொழிலையும் பாதுகாக்கும் வகையிலேயே கிராம உத்தியோகத்தர்கள் செயற்பட வேண்டியுள்ளது.

எனவே, அறிக்கைகள் வெளியிடுவோர் தவறு செய்வோருக்கெதிராக முறைப்பாடு செய்யுங்கள் என்ற வகையிலேயெ வெளியிட வேண்டும். எல்லோரையும் பாதிக்கின்ற வகையில் அறிக்கை வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

சில கிராம உத்தியோகத்தர்களது குடும்பங்களும் இந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டுள்ளன. அதை ஒரு புறம் வைத்து விட்டுத்தான் இவர்கள் பணி புரிகின்றார்கள். கிராம உத்தியோகத்தர் பற்றாக்குறை காரணமாக தமது பிரிவுக்கு மேலதிகமாக சிலர் இன்னொரு பிரிவையும் கவனிக்கின்றனர். இந்த விடயங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வாரத்தில் 6 நாள்கள் பணிபுரியும் கிராம உத்தியோகத்தர்கள் ஏனைய சில சேவையாளர்களை ஒப்பிடுகையில் குறைந்த சம்பளமே பெறுகின்றனர் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்

எனவே, ஒட்டு மொத்த கிராம உத்தியோகத்தர்களும் பாதிக்கப்படும் வகையில் செய்திகளை வெளியிடாது தவறு செய்வோர் குறித்து மட்டும் தகவலைச் சேகரிக்கும் வகையில் செய்திகளை வெளியிடுவது பொருத்தம் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். – என்று உள்ளது.






# நேர்மைத் தன்மையுடன் நாட்டை மீண்டும் கட்டமைப்பது அவசியம்



- ராஜ் சிவநாதன் -
(மெல்போர்ன், ஆஸ்திரேலியா)

இலங்கையை சமீபத்தில் தாக்கிய இயற்கைப் பேரழிவு, பேரிடர் முகாமைத்துவத்தில் மட்டுமல்லாது, ஆட்சி அமைப்புகள், பொருளாதார நிலைத்தன்மை மற்றும் பிராந்திய இணைப்புகளில் உள்ள ஆழமான கட்டமைப்பு பலவீனங்களையும் மீண்டும் வெளிப்படுத்தியுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில், இந்தியாவின் பதில் வேகம், பரவல் மற்றும் கட்டுப்பாட்டுடன் செயல்பட்ட விதம் ஆகியன குறிப்பிடத்தக்கனவாக இருந்தன.

இந்திய அரசு முழுத் தீவையும் உள்ளடக்கிய வகையில் வழங்கிய உடனடி மனிதாபிமான உதவி, ஒரு நற்பண்பான செயல் மட்டுமல்ல. அது இந்தியாவின் அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை கொள்கையையும், பிராந்திய நிலைத்தன்மைக்கான அதன் உறுதிப்பாட்டையும் உறுதியாகக் காட்டியது. அதைவிட முக்கியமாக, இந்தியாவின் ஆரம்ப நடவடிக்கைகள், ஏற்கனவே பொருளாதாரமும் நிர்வாக ரீதியாகவும் பாதிக்கப்பட்டிருந்த இலங்கைக்கு உதவ, பிற நாடுகளையும் முன்வரச் செய்தது.

பல இலங்கையர்களுக்கு, இந்தப் பதில் ஓர் எளிய உண்மையை மீண்டும் உறுதிப்படுத்தியது. இந்தியா என்பது ஓர் அண்டை நாடோ அல்லது மூலோபாய கூட்டாளியோ மட்டுமல்ல் தேசிய துன்ப நேரங்களில் நம்பிக்கைக்குரிய மனிதாபிமான துணை நாடாகும் என்பதுதான் அந்த உண்மை.

ஆனால் உதவி மட்டும் ஒரு நாட்டை மீண்டும் கட்டமைக்க முடியாது. இலங்கை இப்போது ஒரு முக்கிய திருப்புமுனையில் நிற்கிறது. இங்கு, பேரழிவுக்குப் பிந்தைய மீட்பு, நீண்டகால பொருளாதார மற்றும் அரசியல் மறுகட்டமைப்பாக மாற வேண்டிய கட்டாயம் உள்ளது.

**அவசர உதவியிலிருந்து பொருளாதார மீட்பிற்கு**

உடனடி அவசரநிலை கட்டத்தைத் தாண்டி செல்லும் நிலையில், இணைப்பு, வர்த்தகம் மற்றும் முதலீட்டை மையமாகக் கொண்ட பொருளாதார மீட்பே அடுத்த கட்டமாக இருக்க வேண்டும். இந்தப் பின்னணியில், தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துடன் இணைந்து இந்தியா – இலங்கை ஒத்துழைப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

வட மாகாணத்தில் நீண்ட காலமாக தாமதமடைந்த இரண்டு திட்டங்கள், பிராந்திய சலுகைகளாக அல்ல, தேசிய பொருளாதார வளர்ச்சிக்கான முக்கிய இயக்கிகளாக அவசர கவனத்திற்கு உரியவை.

**காங்கேசன்துறை துறைமுகம்**

காங்கேசன்துறை துறைமுகத்தின் மேம்பாடு அதன் மூலோபாய முக்கியத்துவம் இருந்தபோதிலும் பல தசாப்தங்களாக நிலுவையில் உள்ளது. முறையாக மேம்படுத்தப்பட்டால், இது தென் இந்தியா மற்றும் பரந்த ஆசிய துறைமுகங்களுடன் இலங்கையை இணைக்கும் பிராந்திய கடல் வாயிலாகச் செயல்பட முடியும்.

இத்தகைய இணைப்பு வர்த்தகமும் போக்குவரத்தும் வலுப்பெற, கொழும்பை மையமாகக் கொண்ட கட்டமைப்புகளின் அழுத்தம் குறைய, வடக்கில் பொருளாதார செயற்பாடுகள் அதிகரிக்க உதவும். இது ஒரு வடக்கு மாகாணத் திட்டமல்ல. இது தேசிய இணைப்புத் திட்டமாகும்.

**யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம்**

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் நடைமுறை ரீதியான அணுகுமுறையுடன் செயல்படுத்தப்பட்டால், உடனடி பொருளாதார மீட்பிற்கான ஒரு முக்கிய வாய்ப்பாக அமையும். இந்தியாவை குறிப்பாக உள்ளடக்கிய அருகிலுள்ள ஆசிய நாடுகளுடன் முதல் கட்ட பிராந்திய விமான இணைப்பு ஏற்படுத்தப்படுமானால், சுற்றுலா வருகைகள், புலம்பெயர் சமூக ஈடுபாடு, வேலை வாய்ப்புகள் மற்றும் விரைவான GDP வளர்ச்சி சாத்தியமாகும்.

இத்துடன், இரண்டாம் கட்ட மேம்பாடுகள் ஒரே நேரத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும். இது பெரிய விமானங்களை அனுமதிப்பதோடு, கடல் உணவுகள் மற்றும் வேளாண் பொருள்கள் போன்ற உயர்மதிப்புடைய ஏற்றுமதிகளை ஊக்குவித்து, வெளிநாட்டு நாணய வருமானத்தையும் பிராந்திய விநியோக சங்கிலிகளில் வடக்கு உற்பத்தியாளர்களின் இணைப்பையும் வலுப்படுத்தும்.

**பொருளாதார மீட்பும் அரசியல் உட்சேர்ப்பும்**

கட்டமைப்புகளும் முதலீடுகளும் மட்டும் போதுமானவை அல்ல. அரசியல் உள்சேர்ப்பு இல்லாத பொருளாதார மீட்பு நீடித்ததாக இருக்காது என்பதைக் கடந்த கால அனுபவங்கள் தெளிவுபடுத்துகின்றன.

கௌரவம், நில உரிமைகள் மற்றும் நிர்வாகத்தில் அர்த்தமுள்ள பங்கேற்பு என்பவற்றை மையமாகக் கொண்ட தமிழர்களின் நீண்டகால அரசியல் அபிலாசைகளை அவசர நிலைகள் அல்லது பொருளாதார நெருக்கடிகள் என்ற பெயரில் நிரந்தரமாக ஒத்திவைக்க முடியாது.

இந்த விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு பல தசாப்தங்களாக மாறாததாகவே உள்ளது. ஒன்றுபட்ட இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வு, ஜனநாயக மாகாண ஆட்சி அமைப்புகள் மற்றும் சிறுபான்மையினரின் உரிமைகளை பாதுகாக்கும் அரசியல் சட்ட வடிவங்கள் ஆகியவை வளர்ச்சிக்கு தடைகள் அல்ல் அவை நிலைத்தன்மைக்கான அடித்தளங்கள் ஆகும்.

நிலையான மீட்புக்கு பொதுமக்களின் நம்பிக்கை அவசியம். ஜனநாயக செயல்முறைகள் தாமதப்படுத்தப்படும், அதிகாரப் பகிர்வு

தொடர்ச்சி▼

# நேர்மைத் தன்மையுடன் நாட்டை மீண்டும் கட்டமைப்பது அவசியம்

### தொடர்ச்சி▲

அமைப்புகள் செயலிழந்த நிலையில் இருக்கும், அரசியல் கேள்விகள் முடிவில்லாமல் ஒத்திவைக்கப்படும் சூழலில் அந்த நம்பிக்கையை உருவாக்க முடியாது.

**அரசியல் முதிர்ச்சிக்கான தருணம்**

இயற்கைப் பேரழிவுகள் அரசியல் சட்டப் பொறுப்புகளை அழிக்காது. அவை ஜனநாயக செயல்முறைகளை தாமதப்படுத்துவதற்கான காரணங்களாக இருக்கக் கூடாது. மாறாக, அரசியல் முதிர்ச்சியை வலியுறுத்தும் எச்சரிக்கைகளாக இருக்க வேண்டும்.

மனிதாபிமான மீட்பு, இணைப்பை மையமாகக் கொண்ட பொருளாதார வளர்ச்சி மற்றும் அரசியல் உள் சேர்ப்பு ஆகியவற்றை ஒரே கோட்டில் இணைக்கும் வாய்ப்பு இப்போது இலங்கைக்கு உள்ளது. அவசர கால கட்டத்தில் இந்தியா தனது தலைமைத் துவத்தை நேர்த்தியாக வெளிப்படுத்தியுள்ளது. அடுத்த கட்டம், கட்டமைப்புகளையும் நிறுவன நம்பிக்கையையும் ஒருங்கே மீண்டும் கட்டமைக்கும் வகையிலான அமைதியான, கட்டுமானமான ஈடுபாட்டை நோக்கி நகர வேண்டும்.

மீட்பு என்பது பழைய தோல்விகளுக்கு திரும்புவது அல்ல. அது சிறந்த பாதையைத் தேர்ந்தெடுப்பதாக இருக்க வேண்டும்.



# இந்திய மீனவர் வருகையையே எதிர்க்கின்றோம் இந்தியாவை எதிர்க்கவில்லை என்று விளக்கம்!

## வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணைய பிரதிநிதிகள் தெரிவிப்பு

**(எஸ். நிதர்ஷன்)**

வடக்கு மாகாண மீனவர்களாகிய நாம் இந்திய மீனவர்களின் வருகையை எதிர்க்கிறோமே தவிர, இந்தியாவை எதிர்க்கவில்லை என வடக்கு மாகாணக் கடற்றொழிலாளர் இணையப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் பிரதிநிதிகளின் சந்திப்புக்கு பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த விடயம் வலியுறுத்தப்பட்டது.

அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில் –

அண்மையில் இந்திய மீனவர்களுக்கு எதிரான போராட்டம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நடைபெற்றது. அந்தப் போராட்டம் தொடர்பில் பல விடயங்களை நாங்கள் தெளிவுபடுத்த வேண்டி இருக்கிறது.

இந்திய மீனவர்களின் வருகை தொடர்வதன் காரணமாக வடபகுதியில் உள்ள நான்கு மாவட்டங்களிலுமுள்ள மீனவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், ஒவ்வொரு தரப்பும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க ஒரு பெரிய அளவிலான போராட்டத்தை யாழ் மாவட்டம் முன்னெடுத்திருந்தது. அதனை நாங்களும் எதிர்பார்க்கின்றோம். போராட்டம் வரும் போது நாங்களும் பங்காளர்களாக இருப்போம்.

அதே நேரம் போராட்டத்தில் தலைமையை ஏற்றவர்கள் சிலர் கூறிய கருத்துக்கள் விமர்சனங்களுக்கு உள்ளாகி இருக்கின்றன. குறிப்பாக வடக்கு மாகாண மீனவர் என்ற ரீதியில் அந்தப் போராட்டத்தில் சொல்லப்பட்ட கருத்துக்களை கேட்டிருந்தோம். இந்திய தூதரகம் தொடர்பாக கருத்துச் சொல்ல வந்த நபர் கூறிய கருத்து எங்களையும் சற்று யோசிக்க வைத்திருக்கிறது. அது அவருடைய தனிப்பட்ட கருத்தாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறோம்.

வடக்கு மாகாண மீனவர்கள் இன்று கூட இந்திய மீனவர்களின் வருகையை எதிர்க்கிறோமே தவிர இந்தியாவை எதிர்க்கவில்லை. உண்மையிலேயே இலங்கையில் தற்போது இருக்கின்ற நிலையைப் பார்த்துக் கொண்டால் பொருளாதார நெருக்கடியிலும் சரி, அனர்த்த வேளையிலும் சரி இன்று வரை முதலாவதாக இந்தியாவே பங்களிப்பு செய்து வருகிறது.

நிவாரணமோ உதவியோ உட்கட்டுமானங்களோ இந்தியாவே பங்களிக்கிறது. இலங்கையில் மீனவர்களுக்கு அப்பால் இருக்கின்ற மக்களின் தேவைகளை இங்கு இருக்கின்ற துணைத் தூதரகம் நிறைவேற்றி வருகிறது. ஒரு சில நபர்களின் சொந்தக் கருத்தை இவ்வாறான பெரியளவிலான போராட்டங்களின் போது பயன்படுத்துவதை நாங்கள் விரும்பவில்லை. இதை வட பகுதி மீனவர்களின் கருத்தாக ஏற்றுக் கொள்ளப்படக் கூடாது என்பதை இவ்வேளை தெரிவிக்கிறோம்.

வடபகுதி மீனவர்கள் இந்திய அரசை நம்பியே இருக்கிறோம். இந்திய மீனவர்களின் வருகையை தடுக்க வேண்டும் என்றால் அதைத் தூதரக ரீதியாகவும் இராஜதந்திர ரீதியாகவும் தடுக்க முடியும் என நாம் திடமாக நம்புகிறோம். அரசாங்கம் ஊடாக இதையே நாம் கூறி வருகிறோம். இந்திய மீனவர்களின் வருகையைக் கட்டுப்படுத்த இலங்கை அரசும் இந்திய அரசும் முழுமையான செயற்பாட்டை முன்னெடுக்குமாக இருந்தால் இவ்வாறான போராட்டமும் தேவையில்லை.

இந்தியாவை நம்பி வடக்கு மாகாணம் முன்னேற நிறைய தேவை இருக்கிறது. அந்த முன்னேற்றத்தின் பங்காளியாக இந்தியா இருக்க வேண்டும் என இங்குள்ள மக்கள் விரும்புகிறார்கள். எனவே அந்தக் கருத்தை மறுதலித்து நிச்சயமாக எதிர்காலத்தில் அவ்வாறு பேசக்கூடாது. போராட்டத்தை முன்னெடுக்கும் தரப்புகள் இதனைக் கவனத்தில் எடுத்து செயல்பட வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம். – என்றனர்.



# குஷ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது

வத்தளை பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது 21 கிலோ 668 கிராம் குஷ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு 14 பகுதியைச் சேர்ந்த 34 வயதான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட குஷ் தொகையின் பெறுமதி சுமார் 21 கோடியே 66 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது.

# அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்துக்குள் மிகப்பெரிய பொருளாதார நெருக்கடி

## ஹரிண் பெர்ணான்டோ எச்சரிக்கை

டித்வா சூறாவளி பேரழிவின் விளைவுகளை முறையாக நிர்வகிக்காவிட்டால், அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்துக்குள் இலங்கை மிகப்பெரிய அளவிலான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் உதவிப்பொதுச் செயலாளர் ஹரிண் பெர்ணான்டோ இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துரைத்த அவர், அதிதீவிர வானிலையால் ஏற்பட்ட சேதம் கடுமையானது எனக் குறிப்பிட்டார்.

இந்த நிலையைச் சமாளிப்பதற்கு அரசாங்கத்துக்கும் ஜனாதிபதிக்கும் தெளிவான திட்டம் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் இழப்பின் மதிப்பீட்டை முறையாக முன்வைக்கவில்லை.

இந்நிலையில், எதிர்வரும் காலங்களில் அமெரிக்க டொலருக்கான தேவை பாரிய அளவில் அதிகரிக்கும் சாத்தியம் உள்ளதாகவும் ஹரிண் பெர்ணான்டோ எச்சரித்துள்ளார்.



சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டுக்குள் இலங்கை ஒரு பெரிய பொருளாதார சரிவை நோக்கி நகரும் என்றும் அவர் எதிர்வு கூறியுள்ளார்.

# கர்ப்பிணிப் பெண்களுக்கான போஷாக்குக் கொடுப்பனவு

தற்போது நிலவும் இயற்கை அனர்த்த நிலைமையையும் மற்றும் பண்டிகைக் காலத்தையும் கருத்தில் கொண்டு, கர்ப்பிணிப் பெண்களுக்கு வழங்கப்படவுள்ள 5,000 ரூபா போஷாக்கு கொடுப்பனவு இன்று முதல் வழங்கப்படவுள்ளது.

இந்த போஷாக்கு கொடுப்பனவை அடையாளப்பூர்வமாக வழங்கும் நிகழ்வு, மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தலைமையில் இன்று காலை 9.30 மணிக்கு வெள்ளவத்தை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடைபெற உள்ளது.



இந்த கொடுப்பனவு, 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை தாய் சேய் நல நிலையங்களில் பதிவு செய்துள்ள கர்ப்பிணிப் பெண்களுக்கு தொடர்ந்து வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 640 பாடசாலைகள் மீளத் திறக்கப்படா

சீரற்ற காலநிலை மற்றும் அனர்த் தங்கள் காரணமாக மூடப்பட்டிருந்த அனைத்து பாடசாலைகளும் இன்று மீள திறக்கப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் நாலக்க கலுவெவ தெரிவித் துள்ளார்.

அதன்படி, வடக்கு, வடமத்திய, கிழக்கு, தென், சப்ரகமுவ மற்றும் மேல் மாகா ணங்களிலுள்ள சகல பாடசாலைகளும் இன்று மீள திறக்கப்படவுள்ளன.

எவ்வாறாயினும், ஏனைய மூன்று மாகாணங்களில், 640 பாடசாலை கள் மாத்திரம் இன்று கல்வி நடவடிக் கைகளுக்காக மீள திறக்க முடியாத நிலையில் உள்ளன என்றும் அந்த மாவட்டங்களிலுள்ள ஏனைய பாடசா லைகள் மீள திறக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, மத்திய மாகாணத்தில் 111 பாடசாலைகளும், ஊவா மாகாணத்தில் 524 பாடசாலைகளும், வடமேல் மாகா ணத்தில் 5 பாடசாலைகளும் திறக்கப் பட மாட்டாது என கல்வி அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.




பதுளை மாவட்டத்திலேயே அதிக ளவான பாடசாலைகள் மூடப்பட்டுள்ள தாகவும், அதற்கமைய, மஹியங்கனை கல்வி வலயத்தில் 3 பாடசாலைகளும், பிபிலை வலயத்தில் ஒரு பாடசாலையும், பசறை வலயத்தில் 88 பாடசாலைகளும், பதுளை வலயத்தில் 112 பாடசாலைக ளும், வியலுவ வலயத்தில் 70 பாடசா லைகளும், வெலிமடை வலயத்தில் 110 பாடசாலைகளுக்கு, பண்டாரவளை வல யத்தில் 140 பாடசாலைகளும் இன்று திறக்கப்பட மாட்டா என அவர் தெரி வித்தார்.

இந்தநிலையில், திறக்கக்கூடிய நிலையில் உள்ள அனைத்து பாடசா லைகளையும், நிலைமையை ஆராய்ந்த தன் பின்னர் இன்று திறப்பதற்கு தீர் மானிக்கப்பட்டதாக கல்வி அமைச்சின் செயலாளர் நாலக்க கலுவெவ தெரிவித் துள்ளார்.



# 06 மாவட்டங்களுக்கு தொடர்ந்தும் மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிப்பு

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக ஆறு மாவட்டங்களுக்கு விடுக் கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பதுளை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை மற்றும் நுவ ரெலியா ஆகிய மாவட்டங்களுக்கே மண் சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் அறிவித்துள்ளது.

கண்டி மாவட்டத்தின் உடுதும்பர, தொலுவ, மெததும்பர, கங்க இஹல கோரள மற்றும் மினிப்பே ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மூன்றாம் நிலை மண்சரிவு அபாய முன்னெச்ச ரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பதுளை மாவட்டத்தின், பதுளை, ஹப்புத்தளை, ஹாலிஎல, கந்த கெட்டிய, பசறை, மீகஹகிவுல, ஊவ பரணகம, வெலிமட, லுணுகலை, எல்ல, பண்டாரவளை, சொரணாத்தோட்டை மற்றும் ஹல்துமுல்ல ஆகிய பிரிவுக ளுக்கு இரண்டாம் நிலை மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட் டுள்ளது.

கண்டி மாவட்டத்தின், உடபலாத, கங்கவட்ட கோரளை, பாதஹேவா ஹெட்ட, தெல்தோட்டை, அக்குரணை, பாததும்புர, யட்டிநுவர, தும்பனே, உடு நுவர, ஹாரிஸ்பத்துவ, பூஜாபிட்டிய, பஸ்பாகே கோரளை, பன்வில, ஹதரலி யத்த மற்றும் குண்டசாலை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும்,

குருநாகல் மாவட்டத்தின் பொல்கஹவெல மற்றும் அலவ்வ ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், நுவரெலியா மாவட்டத்தின் ஹங்குராங் கெத்த, வலப்பனை, நில்தன்டஹின்ன, மத்துரட்ட மற்றும் நுவரெலியா ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும்,

மாத்தளை மாவட்டத்தின், இரத் தோட்டை, வெலிகமுவ, உக்குவெல, பல்லேபொல, மாத்தளை, லக்கல பல் லேகம, யட்டவத்த, நாவுல, மற்றும் அம்பங்கங்க கோரள ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் இரண்டாம் நிலை மண்சரிவு அபாய முன்னெச்ச ரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.




# இலங்கைக்கு 120 மில்லியன் டொலர் வரை அவசர உதவியை அறிவித்தது உலக வங்கி

"டித்வா" சூறாவளியால் இலங்கையில் ஏற்பட்ட பாரிய அழிவுகளுக்கு உலக வங்கி குழுமம் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளதோடு, நாட்டின் மீள்கட்டுமானப் பணிகளுக்காக 120 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அவசர கால நிதியுதவியை வழங்கவுள்ளதாகவும் அறிவித்துள்ளது.

உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில், இந்த அனர்த்தத்தின் போது இலங்கை மக்கள் வெளிப்படுத்திய அசாத்தியமான மீள்தன்மைக்கும், உயிர்சேதங்களைத் தடுப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்ட துரித நடவடிக்கைகளுக்கும் பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் கோரிக்கையை ஏற்று, ஏற்கனவே நடைமுறையில் உள்ள திட்டங்களில் இருந்து நிதியை மீள் ஒதுக்கீடு செய்வதன் மூலம், 120 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (சுமார் 4000 கோடி இலங்கை ரூபா) வரை அவசர உதவியை உலக வங்கி உடனடியாக வழங்கவுள்ளது.

இந்த நிதி, சூறாவளியால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுகாதாரம், நீர் வழங்கல், கல்வி, விவசாயம் மற்றும் இணைப்பு உட்பட அத்தியாவசிய சேவைகள் மற்றும் உள்கட்டமைப்புகளை மீட்டெடுக்க உதவும்.

உலக வங்கியின் தனியார் துறைப் பிரிவான சர்வதேச நிதிக் கழகம் , வேலை வாய்ப்பை உருவாக்குதல் மற்றும் பொருளாதார மீட்சியை முன்னெடுப்பதற்காக விவசாயம், உற்பத்தி, தளவாடங்கள் மற்றும் சிறு, நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும்.

அத்துடன், நிவாரணப் பணிகளுக்கு வழிகாட்ட, அனர்த்த இடர் குறைப்புக்கான உலகளாவிய வசதியுடன் இணைந்து மதிப்பீட்டுப் பணியை உலக வங்கி ஏற்கனவே ஆரம்பித்துள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

# பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நகரங்களில் விசேட பாதுகாப்பு



எதிர்வரும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நகரங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்களை இலக்காகக் கொண்டு விசேட காவல்துறை பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், உதவி பொலிஸ் அத்தியட்சகருமான எஃப்.யூ. வுட்லர் தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்தில் மாத்திரம் விசேடமாக 2,500 இற்கும் மேற்பட்ட மேலதிக காவல்படையினர் இதற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பண்டிகைக் காலம் நெருங்குவதைத் தொடர்ந்து, அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ் மா அதிபர் ஒரு விசேட செய்தியை வழங்கியுள்ளார்.

அதன்படி, நகரங்களின் பாதுகாப்பு, வழிபாட்டுத்தலங்களின் பாதுகாப்பு, அத்துடன் மக்கள் அதிகம் கூடும் இடங்கள் மற்றும் வணிக வளாகங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, மேல் மாகாணத்தில் 2,500 பேரைக் கொண்ட மேலதிக படையணி இந்த அனைத்து நடவடிக்கைகளுக்காகவும் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இந்த பண்டிகைக் காலத்தில் சிவில் உடையில் உள்ள பொலிஸ் அதிகாரிகள் பலர் உங்கள் உதவிக்கும் பாதுகாப்புக்கும் உள்ளனர்.

மேலும், புலனாய்வு அதிகாரிகளும் உள்ளனர்.

இலங்கை பொலிஸ், விசேட அதிரடிப் படை மற்றும் முப்படையினர் உங்களைப் பாதுகாக்கத் தயாராக உள்ளனர்.

பொதுமக்கள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

நீங்கள் உங்கள் சிற்றூந்து அல்லது உந்துருளிகளை ஏதேனும் ஒரு இடத்தில் நிறுத்தும் போது, அது குறித்து கவனம் செலுத்தவும்.

உங்கள் வாகனத்தில் பெறுமதியான பொருட்கள் அல்லது பணத்தை விட்டுச் செல்ல வேண்டாம்.

உங்களுக்கு யாராவது குறித்து சந்தேகம் ஏற்பட்டால், அருகில் உள்ள பொலிஸ் அதிகாரிக்கு உடனடியாகத் தெரிவிக்கவும்." – என்றார்.

### வடக்கு முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின்

# தரம் III பதவிக்கு ஆள்சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சை டிச. 20 இல்

வடக்கு மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நடத்துவதற்கு வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவால் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும், பரீட்சைக்கு விண்ணப்பித்து, இன்று 16 ஆம் திகதி வரை பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதவர்கள் இன்றிலிருந்து எதிர்வரும் 19 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் அலுவலக நேரத்தினுள் 021 221 9939 என்ற மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவின் பரீட்சைப் பிரிவின் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெற்றவுடன் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களைச் சரிபார்த்து மறுபக்கத்தில் கோரப்படும் விவரங்களை உடனடியாகப் பூரணப்படுத்திக் கொள்ளுமாறும், முழுமையாகப் பூரணப்படுத்தப்படாத அனுமதி அட்டையுடன் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வருகை தரும் பரீட்சார்த்திகள் எக்காரணம் கொண்டும் பரீட்சை எழுதுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளுமாறும் குறிப்பிட்டுள்ள வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் எவ்வாறாயினும், மேற்குறித்த பரீட்சை தொடர்பில் யாதாயினும் தெளிவுபடுத்தல்கள் தேவைப்படும் பரீட்சார்த்திகள் 021 221 9939 என்ற மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவின் தொலைபேசி இலக்கத்துடன் மாத்திரம் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவித்துள்ளார்.

# இணைய மோசடிகள் குறித்து பொதுமக்களுக்கு எச்சரிக்கை



அண்மைய வாரங்களில் சமூக ஊடக தளங்களில் இணைய மோசடிகள் மற்றும் நிதி மோசடி முயற்சிகள் அதிகரித்துள்ளமையினால், பொதுமக்கள் அதிக விழிப்புடன் இருக்குமாறு இலங்கை கணினி அவசர கால பதிலளிப்புக் குழு வலியுறுத்தியுள்ளது.

இந்தச் சம்பவங்கள் பண்டிகைக் காலத்தையும், தற்போது நிலவும் கால நிலை சார்ந்த அனர்த்த சூழ்நிலையையும் பயன்படுத்தி, இணையக் குற்றவாளிகள் பொதுமக்களின் நம்பிக்கையையும், பலவீனத்தையும் சுரண்டுவதற்கு வாய்ப்புகளை உருவாக்குகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

அரசாங்க நிறுவனங்கள், பொதுச் சேவைத் திணைக்களங்கள், புகழ்பெற்ற பல்பொருள் அங்காடிகள் மற்றும் நன்கு அறியப்பட்ட வணிக நிறுவனங்கள் போல ஆள்மாறாட்டம் செய்யும் மோசடித் திட்டங்கள் குறித்து இலங்கை கணினி அவசர கால பதிலளிப்புக் குழுவுக்கு கணிசமான எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்தச் செயலில் ஈடுபடுபவர்கள், சந்தேகப்படாத நபர்களைத் தவறாக வழிநடத்த போலி விளம்பர சலுகைகள், பண வெகுமதிகள் மற்றும் பரிசுகள் பற்றிய அறிவிப்புகளைப் பரப்புகின்றனர் என்று அந்த அறிக்கை குறிப்பிட்டது.

சமீபத்திய சூறாவளி மற்றும் பல பகுதிகளில் பரவலான சேதத்தை ஏற்படுத்திய பலத்த மழைக்குப் பிறகு, இணையக் குற்றவாளிகள் நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளின் பெயர்களை மோசடியாகப் பிரதி எடுத்துள்ளனர் என்று தெரிவித்துள்ளது.

அவர்கள் மக்களை ஏமாற்றும் இணைப்புகளை விநியோகித்து, இந்த வழிகள் மூலம் பணத்தை நன்கொடையாக வழங்குமாறு வற்புறுத்துகின்றனர்.

இதன் விளைவாக, பல பாதிக்கப்பட்டவர்கள் தமது வங்கிக் கணக்குகளிலிருந்து நேரடியாகப் பணத்தை இழந்துள்ளனர்.

சந்தேகத்திற்கிடமான இணைப்புகளை "கிளிக்" செய்வதைத் தவிர்க்கவும்.

நம்பிக்கையற்ற தளங்களில் தனிப்பட்ட தகவல்களைப் பகிர வேண்டாம்.

அடையாளம் தெரியாத நபர்கள் அல்லது சரிபார்க்கப்படாத இணையத்தளங்களுடன் ஒரு முறை கடவுச்சொற்களை பகிர வேண்டாம்.

சட்டபூர்வமான அரசாங்க நிறுவனங்களும், ஸ்தாபிக்கப்பட்ட அமைப்புகளும் வேண்டுகோள் இல்லாத செய்திகள், சமூக ஊடகப் பதிவுகள் அல்லது இணைய இணைப்புகள் மூலம் அத்தகைய முக்கியமான தகவல்களைக் கோருவதில்லை.

இந்தக் காலகட்டத்தில் பொதுமக்கள் அதிக எச்சரிக்கையுடன் இருக்குமாறும், அவர்கள் பெறும் எந்தவொரு செய்தி, நிதி திரட்டும் கோரிக்கை அல்லது நிதிச் சலுகையின் நம்பகத்தன்மையை சரிபார்க்குமாறும் நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

ஏதேனும் சந்தேகத்திற்கிடமான நடவடிக்கையை எமது அவசர இலக்கம் அல்லது உத்தியோகபூர்வ வழிகள் மூலம் இலங்கை கணினி அவசர கால பதிலளிப்புக் குழுவுக்கு அறிவிக்கலாம்.

விழிப்புடன் இருங்கள், பாதுகாப்பாகஇருங்கள்,உங்களின்டிஜிட்டல்அடையாளத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# புதுச்சேரி அரசுக்கு எதிராக பாத யாத்திரை: சோனியா தொடங்கி வைப்பாரென தகவல்

புதுச்சேரியில் என்.ஆர்.காங்கிரஸ் – பா.ஜ.க. அரசுக்கு எதிரான பாத யாத்திரையை தொடங்கி வைக்க வருமாறு காங்கிரஸ் கட்சியினர் விடுத்த அழைப்பை சோனியா, பிரியங்கா ஏற்றுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது .

புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தல் குறித்த ஆலோசனைக் கூட்டம் டில்லியில் காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் நேற்று நடக்கிறது. இக்கூட்டத்தில் புதுவை மாநில காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம் தலைமையில் நிர்வாகிகள் பங்கேற்க டில்லி சென்றுள்ளனர்.

முன்னதாக நேற்று முன்தினம் மாலை டில்லி இந்திரா பவனில் நாடு முழுவதும் உள்ள காங்கிரஸ் நிர்வாகிகளுக்கு சோனியா காந்தி விருந்து அளித்தார். இந்த விருந்தில் புதுவை காங்கிரஸ் நிர்வாகிகள் பங்கேற்றனர் என கூறப்படுகிறது.

அப்போது, புதுவையில் ஆளும் என்.ஆர்..காங்கிரஸ், பா.ஜ.க. அரசை கண்டித்து பொங்கல் பண்டிகைக்கு பிறகு பாத யாத்திரையை காங்கிரஸ் சார்பில் நடத்த உள்ளதாகவும், பாத யாத்திரையை தொடங்கி வைக்க சோனியா காந்தி, பிரியங்கா காந்தி வர வேண்டும் என அழைப்பு விடுத்ததாகவும் கூறப்படுகிறது. இதனை ஏற்று யாத்திரையை தொடங்கி வைக்க சோனியா காந்தி புதுவை வருவதாக உறுதியளித்துள்ளார் என கூறப்படுகிறது.

தேர்தலையொட்டி சோனியா, பிரியங்கா புதுச்சேரி வரவுள்ளமை கட்சியை பலப்படுத்தும் என புதுச்சேரி காங்கிரஸார் தெரிவித்துள்ளனர்.

# தேசிய ஜனநாயக கூட்டணியில் பல கட்சிகள் இணைய வாய்ப்பு

## நயினார் நாகேந்திரன் உறுதி



எங்கள் கூட்டணியில் இன்னும் பல கட்சிகள் இணைய வாய்ப்புள்ளதாக தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் சில தினங்களுக்கு முன்பு டில்லி சென்றார். அங்கு மத்திய அமைச்சர்கள் அமித் ஷா, நிர்மலா சீதாராமனை சந்தித்தார். அப்போது தமிழகத்தில் தேர்தல் கூட்டணி, போட்டியிடவுள்ள தொகுதிகள் குறித்து ஆலோசனை நடத்தியதாக கூறப்படுகிறது. நேற்று பா.ஜ.க. தேசிய செயல் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள நிதின் நபினை சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

அப்போது, நயினார் நாகேந்திரன் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“பா.ஜ.க. புதிய தேசிய தலைவராக இளம் வயதான, துடிப்பான ஒருவரை தேர்வு செய்து பிரதமர் நரேந்திர மோடியும், உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் சரித்தர சாதனையை புரிந்துள்ளனர். பா.ஜ.க. தலைவராக இருந்த நட்டா சிறப்பாக செயல்பட்டு, பல்வேறு மாநிலங்களில் வெற்றியை பெற்றுக்கொடுத்தார். நட்டா மற்றும் நிதின் இருவருக்கும் எனது வாழ்த்துகளையும் தெரிவித்து கொள்கிறேன்.

அமித் ஷாவை தமிழகம் வருமாறு அழைப்பு விடுத்தேன். தமிழகத்தில் நான் மேற்கொள்ளும் யாத்திரை ஜனவரி 9 ஆம் திகதியுடன் முடிகிறது. அதன் நிறைவு விழாவில் பிரதமர் நரேந்திர மோடி அல்லது அமித் ஷா இருவரில் யாராவது ஒருவர் நிச்சயம் கலந்து கொள்வதற்கு வாய்ப்புள்ளது. இதற்காக இருவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பா.ஜ.க. போட்டியிடும் தொகுதிகள் அடங்கிய பட்டியலை நான் அமித் ஷாவிடம் கொடுத்ததாக கூறுவது தவறானது. இன்னும் தேர்தலுக்கு 3 மாதங்கள் இருப்பதால், பல்வேறு மாற்றங்கள் வரலாம். ஆனால், அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணி என்பது உறுதியானது.

இன்னும் பல கட்சிகள் கூட்டணியில் இணைய வாய்ப்புள்ளது. தமிழகத்தில் புதிய கட்சிகளோ சுயேச்சைகளோ வெற்றி பெற்றதாகவோ பெரிய அளவிலான வரலாறு இல்லை. எத்தனை முனைப் போட்டி வந்தாலும் தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியமைப்பது உறுதி. “ என்று தெரிவித்தார்.



# சிட்னியில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு ஈரான் கண்டனம்

அவுஸ்திரேலியாவின் சிட்னியில் உள்ள பொன்டாய் கடற்கரையில் நடத்தப்பட்ட தாக்குதலை ஈரான் கண்டித்துள்ளது.

பயங்கரவாதமும் மக்களைக் கொல்வதும் ஏற்றுக்கொள்ள முடியாதது என்று ஈரானின் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் எஸ்மாயில் பகாய் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தாக்குதலுக்கு ஈரான் கண்டனம்

இவ்வாறான செயல்கள் எங்கு நடந்தாலும் அதை ஈரான் கண்டிக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# அவுஸ்திரேலியாவின் பிரதமர் யூத எதிர்ப்பை தூண்டுகிறார்

## நெதன்யாகு குற்றச்சாட்டு



அவுஸ்திரேலியாவின் போண்டி கடற்கரையில் யூத விடுமுறை கொண்டாட்டத்தில் நேற்று முன்தினம் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 16 பேர் உயிரிழந்தனர். இதனைக் கண்டித்துள்ள இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, அவுஸ்திரேலிய பிரதமர் யூத எதிர்ப்புவாதத்தைத் தூண்டுகிறார் என குற்றம்சாட்டியுள்ளார்.

சிட்னியின் போண்டி கடற்கரையில் யூத மத பண்டிகையான ஹனுக்கா கொண்டாட்ட நிகழ்வின் போது நேற்று முன்தினம் மாலை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதில் 16 பேர் கொல்லப்பட்டனர். ஆஸ்திரேலிய அதிகாரிகள் இதனை திட்டமிட்ட யூத எதிர்ப்புத் தாக்குதல் என்று தெரிவித்தனர். துப்பாக்கிச்சூடு நடத்திய ஒருவர் சம்பவ இடத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். மற்றொருவர் கைதாகியுள்ளார்.

இந்த துப்பாக்கிச் சூட்டை கண்டித்துள்ள இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு,

"அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் கொள்கைகள் யூத எதிர்ப்புவாதத்தை ஊக்குவிப்பதாக ஆகஸ்ட் மாதம் அந்நாட்டின் பிரதமர் அந்தோணி அல்பனீஸ்/க்கு எழுதிய ஒரு கடிதத்தில் தெரிவித்தேன்.

அந்தக் கடிதத்தில், 'பாலஸ்தீன அரசை அங்கீகரிக்கும் உங்கள் முடிவு யூத எதிர்ப்புத் தீயில் எண்ணெய் ஊற்றுகிறது. இது ஹமாஸ் பயங்கரவாதிகளுக்கு வெகுமதி அளிக்கிறது. ஆஸ்திரேலியாவில் யூதர்களை அச்சுறுத்துபவர்களுக்கு இது தைரியத்தை அளிக்கிறது, மேலும் இப்போது உங்கள் தெருக்களில் பரவுகிறது.

உங்கள் அரசும் ஆஸ்திரேலியாவில் யூத எதிர்ப்பு பரவுவதைத் தடுக்க எதுவும் செய்யவில்லை. நீங்கள் நோய் பரவ அனுமதித்தீர்கள், அதன் விளைவு இன்று நாம் கண்ட யூதர்கள் மீதான கொடூரமான தாக்குதல்கள்" என்று அவர் கூறினார்.







# சிட்னி துப்பாக்கிச் சூட்டுக்கு காரணம் பாகிஸ்தானை சேர்ந்த தந்தை, மகன்

## பொலிஸ் தகவல்

அவுஸ்திரேலியாவின் போண்டி கடற்கரையில் யூத விடுமுறை கொண்டாட்டத்தில் நேற்று முன்தினம் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 16 பேர் உயிரிழந்தனர். இந்தக் கொடூரமான துப்பாக்கிச் சூட்டுக்கு காரணம் பாகிஸ்தானைச் சேர்ந்த தந்தையும், மகனும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளது.

சிட்னியின் போண்டி கடற்கரையில் யூத மத பண்டிகையான ஹனுக்கா கொண்டாட்ட நிகழ்வின் போது நேற்று மாலை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதில் 16 பேர் கொல்லப்பட்டனர். அவுஸ்திரேலிய அதிகாரிகள் இதனை திட்டமிட்ட யூத எதிர்ப்புத் தாக்குதல் என்று தெரிவித்தனர். இந்த துப்பாக்கிச்சூட்டில் இருவர் ஈடுபட்டனர் என போலீஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொடூரமான துப்பாக்கிச் சூட்டுக்கு காரணம் பாகிஸ்தானை சேர்ந்த தந்தையும், மகனும் என்பதை நியூ சவுத் வேல்ஸ் காவல்துறை உறுதிப்படுத்தியுள்ளது. துப்பாக்கிச்சூடு நடத்திய 50 வயது மதிக்கத்தக்க நபர் சம்பவ இடத்திலேயே காவல்துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். மேலும், துப்பாக்கியால் சுடப்பட்ட அவரது 24 வயது மகன் மருத்துவமனையில் உயிருக்கு ஆபத்தான நிலையில் காவல்துறை கண்காணிப்பில் உள்ளார்.

இவர்கள் இருவரைத் தவிர வேறு எவரும் இந்தத் தாக்குதலில் ஈடுபடவில்லை என்பதை உறுதிப்படுத்திய காவல்துறை, யூத சமூகத்தினரை இலக்காகக் கொண்டு நடத்தப்பட்ட இந்தத் துப்பாக்கிச் சூடு ஒரு பயங்கரவாதத் தாக்குதல் என வகைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

நியூ சவுத் வேல்ஸ் காவல்துறை ஆணையர் மால் லான்யன் செய்தியாளர்களிடம் பேசுகையில்,

“ஒரே இரவில் விசாரணையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. சம்பவ இடத்திற்கு அருகில் இரண்டு ஐஇடி வெடிகுண்டுகளை காவல்துறை கண்டறிந்து அவற்றை செயலிழக்கச் செய்தது.

விசாரணையின்போது, 50 வயதுடைய அந்த நபர் உரிமம் பெற்ற துப்பாக்கி வைத்திருப்பவர் என்பதையும், அவரது பெயரில் ஆறு துப்பாக்கிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதையும் கண்டறிந்தோம். அந்த ஆறு துப்பாக்கிகளும் போண்டி கடற்கரையில் நடந்த தாக்குதலில் பயன்படுத்தப்பட்டது. அந்த ஆயுதங்கள் எவ்வாறு பெறப்பட்டன, பயன்படுத்தப்பட்டன என்பது குறித்து காவல்துறை விரிவான விசாரணை நடத்தும்” என்று கூறினார்.

இந்த தாக்குதலில் ஈடுபட்டு கொல்லப்பட்ட தந்தையின் பெயர் அவுஸ்திரேலிய அதிகாரிகளால் வெளியிடப்படவில்லை, ஆனால் அவரது மகன் 24 வயதான நவீத் அக்ரம் என அடையாளம் காணப்பட்டுள்ளார். தாக்குதலுக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.






# இன்றைய ராசி பலன்கள்- 16.12.2025




இன்று வெற்றி கிடைக்கும் நாள். வெற்றி பெறுவதற்கான உறுதி உங்களிடம் காணப்படும் நாள்.

உங்கள் பணிகளை நீங்கள் மகிழ்ச்சியாக செய்வீர்கள். சக பணியாளர்களுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள்.

உங்கள் வீட்டில் விருந்தினர் வருகையால் மகிழ்ச்சி நிலவும். இதனால் நீங்கள் மிகவும் உற்சாகத்துடனும் , உறுதியுடனும் காணப்படுவீர்கள்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று செழிப்பாக உணர்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




உங்கள் செயல்களை சுமூகமாகவும் வெற்றிகரமாகவும் செய்வீர்கள். முக்கிய நடவடிக்கைகள் இன்று நற்பலங்களைத் தரும்.

உங்கள் பணியின் தரம் பாராட்டைப் பெறும். உங்கள் பணிகளை அனுசரணையோடு செய்வீர்கள்.

நகைச்சுவை உணர்வு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இது உறவை வலுப்படுத்த உதவும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். அதிகமாக சேமிக்கும் நிலை இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். உங்கள் நகைச்சுவை உணர்வால் சிறப்பாக உணர்வீர்கள்.




இன்று நீங்கள் ஆன்மீகத்தில் ஈடுபடுவீர்கள். அதன் மூலம் பதட்டத்திலிருந்து விடுபட்டு ஆறுதல் பெறுவீர்கள்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் இருக்கும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும். எனவே பணிகளை திட்டமிட்டு முறையாக ஆற்ற வேண்டும்.

குடும்பப் பிரச்சினைகள் காரணமாக இன்று குழப்பமான மன நிலையில் இருப்பீர்கள். இது உங்கள் துணையை வருத்தமுறச் செய்யும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் காணப்படும்.

உங்கள் தந்தையின் உடல் நலத்தில் கவனம் செலுத்த வேண்டும். அதற்காக பணம் செலவு செய்ய நேரும். தந்தையை முறையாக கவனிக்க வேண்டும்.




உங்கள் தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். நேர்மறை எண்ணத்துடனும் உற்சாகத்துடனும் இருப்பது சிறந்தது.

கூடுதல் பணிகள் காணப்பட்டாலும் பணியில் வளர்ச்சி காணப்படும்.கவனமுடன் பணியாற்றுங்கள்.

இன்று உங்கள் துணையுடன் பழகும் போது உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்குமிடையேயான நல்லிணக்கம் பாதிக்கும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. வரவை விட செலவு அதிகமாக இருக்கும்.

மன உளைச்சல் காரணமாக கால் வலியால் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வது சிறந்தது.




உங்கள் வளர்ச்சி குறித்து மகிழ்ச்சியடைவீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்கள் பணியில் சிறந்த பலன்கள் காண்பீர்கள். வேலை தொடர்பான பயணம் காணப்படும். அது உங்களுக்கு பயனுள்ளதாக அமையும்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை மேற்கொள்வது உதவிகரமாக இருக்கும். பொறுப்பு மற்றும் உற்சாக மனப்பான்மை உங்களிடம் காணப்படும். நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்களுக்கு வரவேண்டிய நீண்ட கால நிலுவைத் தொகை வந்து சேரும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் உற்சாகமும் ஆர்வமும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது. நீங்கள் விரும்பியதை அடியஅடைய கடினமாக உழைக்க வேண்டும்.

சக பணியாளர்களுடன் மோதல் காணப்படும். பணிகளைக் கையாளும் போது பொறுமை அவசியம்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனம் தேவை. கோபம் கொள்வதால் உறவின் நல்லிணக்கம் கெடும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. வீட்டில் பெரியவர்களின் உடல் நலத்திற்கு பணம் செலவு செய்ய நேரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. விரைவில் சோர்ந்து போவீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுங்கள். இதனால் உங்கள் உற்சாகம் அதிகமாகும்.

பணிகள் சுமூகமாக நடக்க கவனமுடன் பணியாற்ற வேண்டும். தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

உங்கள் துணையுடனான சந்தேகம் மோதலை ஏற்படுத்தும். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த சந்தேகப் போக்கை தவிர்ப்பது நல்லது.

இன்று போதிய பணம் காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகளை இன்று எடுப்பீர்கள். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செரிமானப் பிரச்சினைகள் மற்றும் கண் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம்.




இன்று தொழில் சார்ந்த மற்றும் யதார்த்தமான அணுகுமுறை உங்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டும். உங்கள் செயல்களை சிறந்த முறையில் ஆற்ற அமைதியான அணுகுமுறை தேவை.

இன்று ஓய்வெடுக்க முடியாதபடி பணிகள் அதிகமாக இருக்கும். பணியில் ஏற்படும் மாறுபாடுகளுடன் ஒத்துப் போக உங்கள் பணிகளை திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

குடும்ப உறவினர்களிடம் நட்போடு நடந்து கொள்ளவேண்டும். இதனால் குடும்ப வட்டார உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

நிதிநிலைமையில் ஸ்திரத்தன்மை இருக்காது.

# இன்றைய ராசி பலன்கள்- 16.12.2025




உங்களின் தொடர் முயற்சி மூலம் இன்று நீங்கள் உங்கள் வளர்ச்சியில் முன்னேற்றம் காணலாம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படும். அது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். மகிழ்ச்சியான மன நிலையில் உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று அதிக பணவரவு காணப்படும்.ஆன்மீக விஷயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று தேக நலன் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் நேர்மறை எண்ணம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் சிறப்பாக இருக்க உற்சாகமாக இருங்கள். தேவையற்ற எண்ணங்களை தவிர்த்திடுங்கள்.

நீங்கள் கவனமுடனும் விழிப்புடனும் பணியாற்ற வேண்டும். உற்சாகமின்மை மற்றும் சோம்பல் காரணமாக பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் ஏற்படும் கருத்து வேறுபாடு காரணமாக வாக்குவாதங்கள் ஏற்படலாம். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

கவனமின்மை காரணமாக பண இழப்பு ஏற்படும். தேவையற்ற செலவுகள் ஏற்படும்.இந்தச் சூழ்நிலையை நீங்கள் கையாள வேண்டும்.




உங்களின் தேவைக்கு பயன்படும் சரியான முடிவுகளை நீங்கள் எடுக்க முடியும். இன்று துடிப்பான நாளாக இருக்கும். கவனமுடன் செயல்பட்டால் நன்மை விளையும்.

உங்கள் பணிகளை உறுதியுடனும் எளிதாகவும் ஆற்றுவீர்கள். உங்கள் முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் துணையுடன் விருந்துகளில் கலந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். மேலும் சமூக வட்டாரத்தில் கலந்து பழக முடியம்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்கும். மியூச்சுவல் பண்டில் நீங்கள் பணம் முதலீடு செய்யலாம்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் இருக்கும் ஆற்றல் காணரமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். .




உங்கள் செயல்களில் கவனம் தேவை. எதிர்மறை எண்ணங்கள் உங்களுக்கு கவலையையும் குழப்பத்தையும் ஏற்படுத்தும்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்காது. பணியில் தவறுகள் நேரும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். எனவே எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

தகவல் பரிமாற்றம் இல்லாத காரணத்தால் உங்கள் துணையுடனான நல்லிணக்கம் கெடும். உங்கள் துணையுடன் தெளிவாக பேச வேண்டியது அவசியம்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்காது. சில சூழ்நிலைகளில் நீங்கள் பணத்தை சரியாக கையாள இயலாது.இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. சளி மற்றும் தொண்டைப் பிரச்சினைகளுக்கு ஆளாக நேரலாம்.





# வவுனியா இக்பால் மகாவித்தியாலயத்தில் முன்மாதிரியாகச் செயற்பட்ட ஆசிரியர்கள்

**(கி.வசந்தன்)**

வவுனியா அல் இக்பால் மகாவித்தியாலய ஆசிரியர்கள் தாமே பாடசாலைச் சூழலைச் சுத்தம் செய்து முன்மாதிரியாக செயற்பட்டுள்ளார்கள்.

புயல் மற்றும் வெள்ளத்தின் காரணமாக பாடசாலைகளுக்கு நீண்ட விடுமுறை வழங்கப்பட்டு இன்றைய தினம் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

இந்நிலையில் அதிபர், ஆசிரியர்கள் கல்விசாரா ஊழியர்கள் நேற்று பாடசாலைக்குச் சமுகளிக்க வேண்டும் என கல்வி அமைச்சு அறிவித்திருந்தது.

அதற்கு அமைவாக வவுனியா அல் இக்பால் மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் காலை 7.30 இற்கு பாடசாலைக்குச் சமூகமளித்திருந்தனர்.

அவர்க இணைந்து பாடசாலை வளாகத்தைச் சிரமதானம் செய்து மாணவர்கள் இன்றைய தினம் கற்பதற்கான சூழலை ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

அதிபர், ஆசிரியர்களின் சிரமதான பணியை பார்த்து காலை 10 மணியின் பின் பாடசாலைக்கு வருகை தந்த மாணவர்களும் மாணவர்களுடைய பெற்றோர்களும் ஆசிரியர்களுடைய செயற்பாட்டை பாராட்டியமையுடன் ஆசிரியர்களுடன் இணைந்து பின்னர் சிரமதான பணியில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







